மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 27 வெள்ளிக்கிழமை (11.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 205




# வேலை நிறுத்தம் வெற்றி-ஜே.வி.பி.

# தோல்வி என அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவிற்கு முகம் கொடுக்கும் நோக்கில் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஜே.வி.பி. நேற்று நாடு தழுவிய ரீதியில் நடத்திய ஒரு நாள் அடையாள பொது வேலை நிறுத்தம் 70 சதவீத வெற்றி பெற்றதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

அதேசமயம் இந்த வேலை நிறுத்தம் தோல்வியடைந்ததாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)


## ஜனாதிபதி மகிந்த நேற்றிரவு இந்தியாவுக்குத் திடீர் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு இந்தியாவுக்கு அவசர பயணத்தினை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதுடில்லிக்குச் செல்லும் மகிந்த இன்று காலை 10 மணிக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

சார்க் மாநாட்டு (10 ஆம் பக்கம் பார்க்க)



## மு.கா. தலைவர் ஹக்கீம் எம்.பியாக பதவி ஏற்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினருமான ரவூவ் ஹக்கீம் நாடாளுமன்ற உறுப்பினராக நேற்றுச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் வி.ஜே.மு.லொக்கு பண்டார தலைமையில் கூடியது. சபை பிரதான நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சபாநாயகர் முன்னிலையில் ரவூவ் ஹக்கீம் எம்.பியாக (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மக்களின் உரிமைகள் அரசினால் மறுக்கப்பட்டுள்ளன

### சிவாஜிலிங்கம் எம்.பி. சபையில் உரை

(கொழும்பு)

அந்தமான்,நிக்கோபர் தீவுகள் போன்று யாழ்ப்பாணமும் இலங்கையிலிருந்து துண்டாடப்பட்டு முழு உரிமையும் அங்குள்ள மக்களுக்கு மறுக்கப்பட்டு விட்டதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் நாடாளுமன்றத்தில் ஆவேசமாக உரை நிகழ்த்தினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் விலை அதிகரிப்பால் நசுக்கப்பட்டுள்ளனர் என்றும் சிவாஜிலிங்கம் எம்.பி. சபையில் தெரிவித்துள்ளார். நிதி அமைச்சின் குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; யாழ்ப்பாண மக்கள் அரிசி-150 ரூபாய், ஆட்டிறைச்சி, கோழி (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை வெளிவரும்

கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான

'இரசாயனவியல்'

பாட மாதிரி வினாத்தாள்.

## ஆசிரியர் நியமனம் குறித்து கொழும்பில் விசேட மாநாடு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் நிலவும் அதிபர், ஆசிரியர்கள், கல்வி சார ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கல் தொடர்பான மாநாடு ஒன்று வடக்கு மாகாண செயலணிக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த, (10 ஆம் பக்கம் பார்க்க)

## எரியுண்ட நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் உள்ள செட்டிகுளத்தில் நேற்றுக் காலை எரியூட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

செட்டிக்குளம் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள இடம் ஒன்றிலிருந்து இந்தச் சடலம் மீட்கப்பட்டதாக (10 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள வியாபாரிகள் மூவர் கல்முனையில் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனையில் சிங்கள வியாபாரிகள் மூவர் நேற்று அடையாளம் தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தென் பகுதியிலிருந்து சென்ற இந்த வியாபாரிகள் மூவரும் கட்டில்களையும் அதற்குரிய மெத்தை விரிப்புக்களையும் கல்முனையில் விற்பனை செய்யும் நோக்கில் சென்று கொண்டிருந்தபோதே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கண்டி வெத்தேகமையை சேர்ந்த இந்திக ஜெயசேகர (வயது-22), வசந்த பிரேமகுமார (வயது-24), அசங்க (10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக் களமுனைகளில் மோதல் 12 படையினர் பலி; 32 பேர் காயம்

(கிளிநொச்சி)

வன்னிக் களமுனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் 7 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 25 ற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

நாயாற்று வெளிப் பகுதியிலிருந்து புதன்கிழமை காலை 6 மணியளவில் ஆட்லறி,பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் டாங்கிகளின் சூட்டாதரவுடன் பள்ளமடு நோக்கி முன்நகர்ந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் தீவிர எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

இதில் படையி (10 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி – யாழ்.மாவட்டம் 15 வயதின் கீழ்ப் பிரிவு

யாழ்.பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடத்தும் போட்டியில்

சென்.ஜோன்ஸ் கல்லூரி 'B' எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

ஊடக அனுசரணை :- வலம்புரி

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகளின் படை வலிமை தக்கவைக்கப்பட்டுள்ளது; முடக்க நிலையில் யுத்தம் - இக்பால் அத்தாஸ்

(கொழும்பு)

வெற்றியும் இன்றி, தோல்வியும் இன்றி முடக்கநிலையை யுத்தம் அடைந்திருப்பதாக, இக்பால் அத்தாஸ் கருத்து வெளியிட்டுள்ளார். இதுகுறித்து ஊடகச் செவ்வியை வழங்கியிருக்கும்,

தென்னிலங்கையின் முன்னணி படைத்துறை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ், யுத்தத்தை அரசாங்கம் முடிபுக்குக் கொண்டு வரும்வரை, அதனால் ஏற்படும் சுமைகள் தம்மையே பாதிக்கும் என்ற எண்ணம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை ஆகிய கிழக்கு மாவட்டங்களிலும், யாழ். குடாநாட்டிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்து வரும் அதே வேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் படை வலிமை தக்க வைக்கப்பட்டிருப்பதாகவும், இக்பால் அத்தாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான பின்புலத்தில், வெற்றியும் இன்றி, தோல்வியும் இன்றி, முடக்கநிலையை யுத்தம் அடைந்திருப்பதாகவே தற்பொழுது கருத முடியும் என்றும், இக்பால் அத்தாஸ் கருத்து வெளியிட்டுள்ளார். (அ)

## புதிய கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலையின் புதிய கட்டடத்திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பாடசாலை அதிபர் சு.பிலேந்திரராசா த்லைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ -6)

## ஸ்ரீ அம்மா பகவான் பாத பூஜை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீ அம்மா பகவானின் பாதங்களுக்கான அபிசேஷகமும் பாத பூஜையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் உள்ள ஸ்ரீ கல்கி பகவான் ஆன்மீக மையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொண்டு ஸ்ரீ கல்கி பத்மாவதி சமேத ஸ்ரீ கல்கி பகவானின் அருளைப் பெற்றுய்யுமாறு ஸ்ரீ கல்கி ஆன்மீக மையத்தினர் கேட்டுள்ளனர் (அ-6)

# ஜேர்மன் - இலங்கை இரகசிய பேரம் அம்பலப்படுத்துகிறது ஜேர்மன் சஞ்சிகை

ஜேர்மனியிலிருந்து வெளிவரும் Der Spiegel எனும் சஞ்சிகை தனது 23.06.2008 நாளிதழில் ஜேர்மனிக்கும் இலங்கைக்கும் இடையே நடைபெற்ற இரகசிய பேரமொன்றை அம்பலப்படுத்தியுள்ளது.

'நேர்த்தியற்ற பேரம்' என்ற தலைப்பில் ஜேர்மனியில் பல்லாயிரக்கணக்கான வாசகர்களைக் கொண்ட இப்பிரபலமான சஞ்சிகையில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புச் சபையில் மீண்டும் நுழைவதற்கு தேவையான எந்த விலையைக் கொடுக்கவும் ஜேர்மன் அரசு தயாராகவிருக்கின்றது.

எதிர்வரும் 2010, 2011ஆம் ஆண்டுகளில் பாதுகாப்புச் சபையில் ஒரு பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கான ஆதரவாளர்களைத் திரட்டும் முயற்சியில், நியூயோர்க்கில் உள்ள ஜேர்மனிய நிரந்தரப் பிரதிநிதி கடந்த பெப்ரவரி மாதம் மிக இரகசியமான ஒப்பந்தமொன்றை இலங்கையுடன் செய்துள்ளார்.

இந்த நேர்த்தியற்ற பேரம் தொடர்பில் தெரிய வருவதாவது,

மே மாதம் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆலோசனைச் சபையில் மீண்டும் இலங்கை தெரிவு செய்யப்படுவதற்கு ஜேர்மனி, ஆதரவளிக்கும். அதே வேளை 2010 இல் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் ஜேர்மனி பிரதிநிதித்துவம் பெற இலங்கை அரசு ஆதரவு வழங்கும்.

இந்தப்பேரத்தில் சூடான விடயம் என்னவென்றால், மனித உரிமை மீறல்களுக்காக வருடக் கணக்காக இலங்க்கை குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. அத்துடன் மார்ச்சில் மனித உரிமை கண்காணிப்பகம் தமிழர்கள். மனித உரிமைவாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு காணாமல் போனதாக 99 சம்பவங்களை பட்டியலிட்டுள்ளது.

இச் சம்பவங்களில் அரச படையினர் வெளிப்படையாகவே தொடர்புபட்டிருந்தனர். உலக அரங்கைப் பொறுத்தவரை முதன் முதலாக ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த குழுவொன்று 2007 இல் 317 பேர் காணாமல் போனதாக உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு ஆதரவு வழங்கும் ஜேர்மனியின் இந்தப் பேரம் குறித்து ஜேர்மன் வெளிநாட்டமைச்சு கருத்து எதுவும் தெரிவிக்க மறுத்த போதும் இப் பேரம் எதற்கும் உதவவில்லை. ஏனெனில் 21 ஆம் திகதி மே மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பாதுகாப்புக் குழுவிலிருந்து வெளியேற்றப்பட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தேசிய வைத்தியசாலையின் ஊழியர்களுடன் மேவின் சில்வா முறுகல்

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் சந்தித்த அனுபவத்தை போன்ற மற்றும் ஒரு அனுபவத்தை அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று முன்தினம் மீண்டும் சந்தித்தார்.

மேர்வின் சில்வா, தேசிய வைத்தியசாலையின் சமையலறைக்கு சென்று அங்குள்ள ஊழியர்களை பணிப்புறக்கணிப்பிற்கு ஆதரவளிக்கக்கூடாது என அச்சுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து அந்த ஊழியர்கள் அனைவரும் அமைச்சரை சுற்றிவளைத்துக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, ஒருவாறு அவர் சமாளித்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர் மேர்வின் சில்வாவின் உதவியாளரான கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் சமன் அபேகுணவர்த்தன, நேற்றுமுன்தினம் கொழும்பு கண் வைத்தியசாலைக்கு சென்று அங்கு ஊழியர்களை பணிப்புறக்கணிப்பில் பங்கேற்கக் கூடாது என அச்சுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து அவர் ஊழியர்களின் பலத்த எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சுகாதார விழிப்புணர்வு கண்காட்சி

(அல்வாய்)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வழிகாட்டலில் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களை வெளிப்படுத்தும் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமையும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், மருதங்கேணி பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தாய் சேய் நல வைத்திய அதிகாரி திருமதி கு.சிவசுங்கர், பிராந்திய மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம், மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பதில் மாவட்ட அதிகாரி வைத்திய கலாநிதி வே.ஜெயராஜா, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி வைத்திய கலாநிதி த.மயிலேறும்பெருமாள். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ.சேதுராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-19)

## பொதுக் கூட்டம்

(அல்வாய் )

பருத்தித்துறை சாரதா சேவர்ச்சிரம கிளைச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-19)

## காரைநகர் பிரதேசத்தில் சமூர்த்தி அதிகாரசபை மேற்கொள்ளும் அபிவிருத்தி செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்தில் பயன்மிகு அபிவிருத்தித் திட்டங்கள் சமுர்த்திப் பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக காரைநகர் சமுர்த்தி வங்கிச்சங்க வட்டாரங்க்ள் தெரிவித்துள்ளன.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் மூவாயிரம் கிராமங்கள் அபிவிருத்தி என்ற தலைப்பின் கீழ், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் மூன்று கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. காரைநகர் கிழக்கு, காரைநகர் வடகிழக்கு, காரைநகர் மத்தி ஆகிய மூன்று கிராமங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவற்றிற்கான அபிவிருத்திக்காக தலா மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் பெறுமதியான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

வாழ்வாதார கருத்திட்டத்தின் கீழ் ஒன்பது பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மானிய அடிப்படையில் தொழில் சார் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த வருட இறுதிக் காலப் பகுதிக்கான சமூக பாதுகாப்பு நிதிக்காக விண்ணப்பித்த 86 பயனாளிகளுக்கு நான்கு இலட்சத்து ஐம்பத்தொராயிரத்து முந்நூறு ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. இவற்றுள் பிறப்பு நிகழ்விற்காக விண்ணப்பித்த இருபது பயனாளிகளிற்கு 72 ஆயிரத்து ஐந்நூறு ரூபாயும் திருமண நிகழ்விற்காக விண்ணப்பித்த பத்தொன்பது பயனாளிகளிற்கு 19ஆயிரம் ரூபாயும் மருத்துவ நிகழ்விற்காக விண்ணப்பித்த 12 பயனாளிகளுக்கு 9 ஆயிரத்து 800 ரூபாயும் மரண நிகழ்விற்காக விண்ணப்பித்த 35 பயனாளிகளுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் வழங்குவதற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இக் கொடுப்பனவுகள் அடுத்த வாரமளவில் வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சமுர்த்தி அதிகார சபையின் வீட்டு லொத்தர் தெரிவின்போது காரைநகர் வடகிழக்கு பிரிவு பயனாளி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் காசோலை வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-246)

## சூரிய ஒளி மூலம் நீர்த்தொற்று நீக்குதல்

**கிராம அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

சர்வதேச அபிவிருத்தி மற்றும் முகாமை (IDM) நிறுவனம் இம் மாதம் 16ஆம்திகதி புதன்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராமசேவகர்களுக்கு சூரியஒளி மூலம் நீர்த்தொற்று நீக்குவது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கவுள்ளனர். நிகழ்வில் (IDM) நிறுவன பொறுப்பதிகாரி கலாநிதி நச்சினார்க்கினியன் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

**பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல்**

பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலகத்தில் பாடசாலை அதிபர்களுக்கான, சூரிய ஒளிமூலம் நீர்த்தொற்றை நீக்குதல் சம்பந்தமான கலந்துரையாடலை (IDM) நிறுவனம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடாத்தவுள்ளது. இக்கலந்துரையாடலில் ஒவ்வொரு பாடசாலை அதிபர் அல்லது உபஅதிபர்களும் தவறாது பங்குகொள்ளுமாறு பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் அறிவித்துள்ளார். (ஓ-19)



ஏழாலை வடக்கில் சுன்னாகம் சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டாய சேமிப்பு புத்தகங்கள் வழங்கும் விழாவில் ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலய அதிபர் ந.சுப்பிரமணியம் உரையாற்றுவதையும், சுன்னாகம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி க.புஸ்பலோஜினி மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## இடத்தின் மகிமை !

பார்த்தசாரதிஎன்றால் என்ன அர்த்தம் ? பார்த்தனுக்கு சாரதி. அதாவதுஅர்ஜுனனுக்குத் தேரோட்டியவன். அது கண்ணன் என்றுநமக்குத் தெரியும். இந்தக்கண்ணன் அர்ஜுனனுக்கு இரண்டாவதுபார்த்தசாரதிதான்.

கண்ணனுக்கு முன்பேஅர்ஜுனனுக்கு, தேரோட்டியவன் விராடதேசத்து இளவரசனான உத்தரகுமாரன். பஞ்ச பாண்டவர்கள்அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த காலம் அது.

அவர்கள்விராட தேசத்தில்தான் இருப்பார்கள் என்று எண்ணிய துரியோதனன் அவர்களை வெளிப் படுத்துவதற்காக சில முயற்சிகளை செய்தான். தனது சேனைகளையெல்லாம்அழைத்துக்கொண்டு போய் அந்த நாட்டில் உள்ள பசுக்களையெல்லாம் ஓட்டிக்கொண்டு போனான்.

அந்த சமயத்தில் விராட மன்னன் வேறு ஒரு திசையில் போர் செய்வதற்காகப்போயிருந்தான். அவனுடைய மகன் உத்தரகுமாரன் சரியான பயந்தாங்கொள்ளி! கத்தியைப் பார்த்தாலே பயப்படுவான். இருந்தாலும் வேறு வழியில்லாமல் போர் முனைக்குப் போக வேண்டியஇக்கட்டான சூழ்நிலை அவனுக்கு இருந்தது.

இந்த சமயத்தில் தான் அர்ஜுனன் அவனுக்கு உதவி செய்ய வந்தான். அர்ஜுனன் தனது உருவத்தை மாற்றிக் கொண்டான். உத்தர குமாரன்மாதிரி... அதாவது பேடி உருவத்தில் இருந்த அர்ஜுனன்அவனுக்கு சாரதியாக வந்தமர்ந்தான்.

ஆனால், போர் முனைக்குப் போய் சேர்ந்த உடனே உத்தர குமாரன் தேர் ஓட்டினான். அர்ஜுனன் கௌரவ சேனைகளை விரட்டி அடித்தான். அவர்களெல்லாம் புறமுதுகு காட்டி ஓடினார்கள்.

அதற்குப்பின் ஊருக்குத் திரும்பும் போது, அர்ஜுனன் மறுபடியும் 'பேடி' உருவத்தில் தேர் ஓட்டிக்கொண்டு வந்தான். உத்தரகுமாரன் தேரில் உட்கார்ந்திருந்தான். பார்த்தவர்களெல்லாம் உத்தரகுமாரன் தான் கௌரவர்களை முறியடித்துவிட்டு வருகிறான் என்று நினைத்து அவனைப் பாராட்டினார்கள்.

அர்ஜுனனும் தான் சண்டை போட்டவிஷயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம். அந்த ரகசியம் நமக்குள்ளேயே இருக்கட்டும் என்று உத்தரகுமாரனிடம் சொல்லிவிட்டான்.

கத்தியைக் கண்டாலே பயந்து நடுங்கும் உத்தரகுமாரனுக்கு போரில் ஜெயித்தான் என்ற பெயரும் புகழும் எப்படி வந்தது? அது தான் அந்த ஸ்தானத்தின் மகிமை என்கிறார் ஒரு ஆன்மீகப் பேச்சாளர். (ஜெயராம சர்மா)

அவன் கொஞ்ச நேரம் உட்கார்ந்து தேர் ஓட்டினானே அந்த இடத்தின் மகிமைதான் அவனுக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தது. பின்னர், கிருஷ்ணன் உட்கார்ந்து பெருமைப்படுத்தப் போகின்ற அந்த ஸ்தானத்தில் உத்திரகுமாரன் முன்னரே உட்கார்ந்தான். அதனால் அவனுக்கு அத்தனை பெருமை கிடைத்தது.

ஒரு நாற்காலிக்கு மதிப்பு ஏற்படுவதே அதில் உட்காருபவர்களைப் பொறுத்துத்தான்.

இது இன்னார் உட்கார்ந்த நாற்காலி என்று இப்பொழுதும் பெருமையாகச் சொல்கிறோமல்லவா! நாமெல்லாம் நாற்காலியில் உட்கார்ந்தால்... அந்த நாற்காலி ஏற்கனவே வேண்டி வைத்திருக்கும் பெருமையை காப்பாற்றும் அளவுக்கு அதில் உட்கார வேண்டும். அதுதான் நமக்கும் நல்லது நாற்காலிக்கும் நல்லது.

ஒரு ஆள் அலுவலகமொன்றில் வேலைக்குச்சேர்ந்த முதல்நாள் அவனுக்கென்று இருந்த நாற்காலியில் உட்காரப் போனான். அதற்கு முதல் "நான் லஞ்சம் வாங்க மாட்டேன்" என்று சபதம் எடுத்துக் கொண்டான்.

"அப்படியானால் என்மீது உட்காராதே!" என்று கத்தியது அந்த நாற்காலி.

"ஏனென்றால்... நானே இங்கு லஞ்சமாக வந்து சேர்ந்த நாற்காலி தான்" என்றதாம் அந்த நாற்காலி!

இது... அந்த இடத்தின் மகிமை!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மன்னாரில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நிறுவ தமிழ் எம்.பிக்களுக்கு கல்வி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிற்கும் தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான விஷேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது மன்னாரில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அடுத்த வருடம் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்காக தெரிவு செய்யப்படவுள்ளார்கள். மன்னாரிலேயே பயிற்சிகளைப் பெறுவதற்கான விபரங்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உறுதியளித்துள்ளார்.

அத்துடன், பயிற்சிகளைப் பெறும் ஆசிரியர்களை நிரந்தர மாக்குவதற்கும்தேவையான கட்டவசதிகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுப்பதாக அமைச்சர் வாக்குறுதி அளித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை நிரந்தர மாக்குவதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களானசெல்வம் அடைக் கலநாதன், வினோதரலிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோருடன் அமைச்சர் ரிஸாட் பதியுதீனும் கலந்து கொண்டார். (அ)

# சுத்திகரிப்புத் தொழிலாளர் ஆண்கள் ஆட்சேர்ப்பு செயன்முறை நேர்முகப் பரீட்சை

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைக்குட்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர் ஆண்கள் ஆட்சேர்ப்பு விண்ணப்பதாரிகளிற்கான செயன்முறை நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16, 18,19ஆம் திகதிகளில் பிரதேச வைத்தியசாலை அச்சுவேலியில் காலை 8 மணிக்கு நடைபெறும். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு,

16ஆம் திகதி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

ச.குருதேவன்-கோண்டாவில், பா.ரஜபன்-புத்தூர், க.கபிலன்-அச்செழு, கு.செந்தூரன்-புத்தூர், க.மயூரன்-புத்தூர், ஜெ.காண்டீபன்-அச்சுவேலி, க.ஜகஜீவன்-கோண்டாவில் அ.அல்பேட் அருள்ராஜா-உரும்பிராய், த.தவரூபன்-உரும்பிராய், த.அசோக்-அச்சுவேலி, த.சன்பிரசன்னா-திருநெல்வேலி, சி.சுதர்சன்-கோண்டாவில், பொ.காண்டீபன்-கோண்டாவில், து.நந்துஜன-கோண்டாவில், மு.றத்பன்-உரும்பிராய், ரா.சோதிராஜா-புத்தூர், அ.றெனோஜன்-உரும்பிராய், ந.நவதீசன்-உரும்பிராய், ந.பிரபு-கோண்டாவில், தெ.தெய்வகரன்-புத்தூர், த.தசீபன்-புத்தூர், பா.உதயகுமார், கொக்குவில், சு.ஜெகதீபன்-கொக்குவில், சி.கஜேந்திரன்-கொக்குவில், த.றதீஸ்வரன்-கோண்டாவில், இ.ராஜேஸ்குமார்-கொக்குவில், சீ.தர்சன்-கோண்டாவில், இ.விஜயரூபன்-புத்தூர்.

கி.றொபின்சன்-உரும்பிராய் மேற்கு, தி.தினேஷ்குமார்-திருநெல்வேலி, பொ.இன்பராஜா- திருநெல்வேலி, ச.தனேசன்-நல்லூர் வடக்கு, இ.கிருஷ்ணகுமார்- புதிய செம்மணி வீதி, ப.மதன்-நல்லூர், த.கிருபாகரன்-கோப்பாய் வடக்கு, தே.ஜெயராம்-கோண்டாவில்கிழக்கு, இ.விஜயகுமார்-கொக்குவில் மேற்கு, த.ததீஸ்வரன்-கோண்டாவில் கிழக்கு, த.சுதாகரன்-புத்தூர், ப.பஜிஸ்தரன்-வளலாய் தெற்கு, உ.ரவீந்திரநாதன்-புத்தூர் கிழக்கு.

ப.பர்சுதன்-வளலாய் தெற்கு. பே.மன்மதராஜன்-கோப்பாய் வடக்கு, ந.அனுரூபன்-கோண்டாவில்கிழக்கு, செ.வாகீசன்-புத்தூர், தெ.சுகிர்தன்-கோண்டாவில் கிழக்கு, பா.பாலராஜ்-நீர்வேலி தெற்கு, ப.அகிலன்ராஜ்-கோண்டாவில், கு.கஜீவன்-கோண்டாவில் கிழக்கு, ம.நிமலன்-கொக்குவில் மேற்கு.

த.ஜெகதீஸ்வரன்-கோப்பாய் கிழக்கு, கு.தனுரன்-கோண்டாவில் கிழக்கு, கு.விஷ்ணு-கோண்டாவில் கிழக்கு, அ.சுஜீபன்-கோண்டாவில் கிழக்கு, த.ஜனார்தனன்-கோண்டாவில் கிழக்கு, பொ.அகில்ராஜ்-புத்தூர், த.தர்மதேவா-நெல்லியடி வடக்கு, க.கணேசபதி-கோண்டாவில் கிழக்கு, த.சஜீபன்-அச்செழு வடக்கு, தே.ஜோன்ஷன்- கோண்டாவில் கிழக்கு, ம.மரகத மயூரன் புத்தூர் கிழக்கு, இ.தர்சன்- புத்தூர் கிழக்கு, இ.துசிதன்-புத்தூர் கிழக்கு, ச.றஜீவன்-வாதரவத்தை.

ம.நிரூசன்-கோப்பாய் தெற்கு, சீ.சுரேந்திரன்-திருநெல்வேலி, ச.அமலதாஸ்-திருநெல்வேலி, நா.செந்தூரன்-இருபாலை கிழக்கு, வ.தனேசன்-திருநெல்வேலி, மா.அன்பழகன்-அச்செழு, க.கோகுலன்-கொக்குவில் கிழக்கு, தே.சிவரூபன்-உரும்பிராய் தெற்கு, த.சுகந்தன்-கோண்டாவில் கிழக்கு, அ.சஞ்சீவன்-கோண்டாவில்கிழக்கு, க.தனுஜன்-உரும்பிராய் வடக்கு, த.ரமணன்-உரும்பிராய் வடக்கு, செ.பாஸ்கரன்-உரும்பிராய் வடக்கு, சி.சிவராதன்-வாதரவத்தை, கா.கோகுலன்-வாதரவத்தை.

தி.மதிவதன்-கோப்புாய் மத்தி, வ.கிருஷ்ணபாலன்-உரும்பிராய் வடக்கு, கு.முரளிஸ்தரன்-உரும்பிராய் மேற்கு, ம.சுதாகர்-அச்செழு, க.அஜந்தன்-பால்சாலை வீதி, இ.பார்த்தீபன்-அச்செழு தெற்கு, த.றமேஸ்-உரும்பிராய் மேற்கு, தெ.சுதர்சன்-கோண்டாவில் கிழக்கு, ச.பிரதாபன்-உரும்பிராய் மேற்கு, ச.கஜன்-கொக்குவில் மேற்கு, த.திவாகரன்-சிறுப்பிட்டி மேற்கு, வி.நிசாந்தன்-செல்வபுரம், வி.கிசாந்தன்-செல்வபுரம்.

பா.ஜெகதாசன்-உரும்பிராய் தெற்கு, த.பிரதீபன்-புத்தூர் கிழக்கு, செ.கோகுலன்-புத்தூர் கிழக்கு, இ.லதீஸ்வரன்-புத்தூர் கிழக்கு, வி.அருணாசலம்-திருநெல்வேலி, ல.நவநீதன்-திருநெல்வேலி, மு.துயாஸ்வரன்-கோண்டாவில் கிழக்கு, அ.தர்மராஜா-கோண்டாவில் கிழக்கு, ப.கதீஸ்கரன்-கோண்டாவில் கிழக்கு, அ.சத்தியராஜா-புத்தூர் கிழக்கு, க.ரஜீவ்-நீர்வேலி, ச.தியாகரங்கன்-நீர்வேலி, தி.மகிந்தன்-தாவடி, இ.மயூரன்-புத்தூர் கிழக்கு, ப.கேசவன்-அச்சுவேலி, க.கணேசராஜா-புத்தூர் கிழக்கு.

கு.சுஜிர்தன்-கோப்பாய் தெற்கு, ம.பிரபாகரன்-கோண்டாவில் கிழக்கு, பா.பாஸ்கரன்-உரும்பிராய் தெற்கு, இ.பிரதீபன்-உரும்பிராய் மேற்கு, க.நிரஞ்சன்-கோண்டாவில் கிழக்கு, வெ.ராஜமோகன்-புத்தூர் கிழக்கு, இ.துஷாந்த்-புத்தூர் கிழக்கு, ச.நிசாந்தன்-புத்தூர் கிழக்கு, வ.ஜெயக்குமார்-கோப்பாய் வடக்கு, இ.பார்த்தீபன்-உரும்பிராய் மேற்கு, செ.நவீந்திரன்-உரும்பிராய் மேற்கு.

இ.மயூரன்-நீர்வேலி, கு.ஜெயந்தன்-நீர்வேலி, சு.தயாபரன்-புத்தூர், த.விஜிமதன்-உரும்பிராய் மேற்கு, ஜோ.பிரபாகரன்-புத்தூர் கிழக்கு.

ம.பார்த்தீபன்-புத்தூர் கிழக்கு; ம.தனுசன்-கோண்டாவில் கிழக்கு, க.ஜெயதாசன்-புத்தூர், வா.கிருபராஜா-திருநெல்வேலி, ப.பகீஸ்கரன்-கோண்டாவில் கிழக்கு, த.தசீபன்-புத்தூர், அ.அருள்ராஜபதி-சிறுப்பிட்டி தெற்கு, பா.கபிலேஸ்வரன்-அச்சுவேலி வடக்கு, பா.ரஜித்-கொக்குவில்.

யோ.நிஷாந்-புத்தூர் கிழக்கு, நா.ஜெனகரன்-புத்தூர் மேற்கு, செ.தனீஸ்வரன்- ஆவரங்கால் கிழக்கு, இ.கிருஷாந்தன்-நீர்வேலி, ச.ரமேஷ்-புத்தூர், கி.சத்யேந்திரன்-அச்சுவேலி வடக்கு.

பூ.ஜெனரூபன்-உரும்பிராய் மேற்கு, அ.அன்புராஜ்-உடுவில், தி.ஜசிந்தகுமார்-புத்தூர் மேற்கு, சீ.சதீஸ்-கோண்டாவில் கிழக்கு, நா.தயானந்தன்-கொக்குவில் மேற்கு, து.தனவந்தன்-அச்சுவேலி, வ.அன்புராஜ்-நல்லூர், ப.சஜிந்தன்-கோண்டாவில் மேற்கு, இ.அபிராம்-அச்சுவேலி, க.சுந்தரவேல்-புத்தூர், கு.ஸ்ரீஸ்கந்தராஜா-கொக்குவில் மேற்கு.

# இராசிபலன்

*11.07.2008*
*(ஆனி 27, வெள்ளிக்கிழமை)*
*சித்திரை பிற்பகல் 2.00 மணிவரை*
*நவமி பின்னிரவு 3.43 மணிவரை*
*இராகுகாலம் 10.29-11.59 மணிவரை*
*சுபநேரம்-05.59-07.29 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | மனோதைரியம், கீர்த்தி, தன்லாபம், தெய்வதரிசனம். |
| இடபம் | தேகநலன், காரிய அனுகூலம், மனமகிழ்ச்சி, பகைவரால் நன்மை. |
| மிதுனம் | பணக்குறைவு, அஜீரணக் கோளாறு, காரிய இடையூறு. |
| கடகம் | தன்னம்பிக்கைக்குறைவு, தனவிரயம், தெய்வசிந்தை. |
| சிங்கம் | மனோதைரியம், நற்கீர்த்தி, உறவினர் வழி நன்மை. |
| கன்னி | அதிகசெலவு, மனோசங்கடம், காரிய தாமதம், தெய்வசிந்தை. |
| துலாம் | வெகுமானம், சயனசுகம், மாதர் நட்பு, சிந்தனை மிகுதி. |
| விருச்சிகம் | சோம்பல் நிலை, தனவிரயம், சயனசுகக்குறைவு, பயணம். |
| தனுசு | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, குடும்பசுகம். |
| மகரம் | நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படுதல், ஆரோக்கியம். |
| கும்பம் | எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை, உத்தியோக பங்கம். |
| மீனம் | மனக்கவலை, முழங்கால்வலி, தொழில் மந்தநிலை, காரியதாமதம். |

வளவன்



தென்னிந்தியத் திருச்சபையின் மானிப்பாய் அருள்மனை சிறுவர் இல்ல கால்போமன் சிறுவர் பூங்கா திறப்புவிழாவில், பூங்காவை தென்னிந்தியத் திருச்சபையின் இலங்கைக்கான இணைப்பாளர் அனிகுரேன் திறந்து வைப்பதையும், டாக்டர் தேவன் உரையாற்றுவதையும், சாகசம் நிகழ்த்திய அருள்மனை சிறுவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: கோபி)

## ஐ.சி.சி. டெஸ்ட் தர வரிசையில் துடுப்பாட்டம், பந்துவீச்சில் இலங்கை வீரர்கள் முதலிடம்

(டுபாய்)

டெஸ்ட் போட்டிக்கான ஐ.சி.சி தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி ஒரு இடம் பின் தங்கி 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. டெஸ்ட் போட்டிக்கான வருடாந்த தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட்சபை டுபாயில் நேற்று முன்தினம் வெளியிட்டது. இதில் அவுஸ்திரேலியா 138 தரப் புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறது. இந் திய அணி 113 புள்ளிகளுடன் ஒரு இடம் பின் தங்கி 3ஆவது இடத்தைப் பிடித்தது. தென் னாபிரிக்கா (115) 2ஆவது இடத்துக்கு முன் னேறியுள்ளது.

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான முதல் 10 பட்டியலில் ஒரு இந்திய வீரர் கூட இடம் பெறவில்லை. இலங்கை அணியின் சங்கக்காரா 893 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். மேற்கிந்திய தீவுகள் வீரர் சந்தர் போல் (890) 2ஆவது இடத்திலும், அவுஸ்திரேலிய வீரர் மைக்கேல் ஹஸி (882) 3ஆவது இடத்திலும் உள்ளனர். பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் இலங்கை சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் (897) தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். தென்னாபிரிக்காவின் ஸ்டெயின் (892) அவுஸ்திரேலியா வீரர் ஸ்டூவட் கிளார்க் (863) அடுத்த இடங்களில் உள்ளனர்.

இந்திய அணித்தலைவர் கும்ளே 8ஆவது இடம் (708) பிடித்துள்ளார். சகல துறை ஆட்டக்காரர்களுக்கான தரவரிசையில் தென்னாபிரிக்க வீரர் ஜக்கலிஸ் (495) முதல் இடத்தில் உள்ளார். இந்திய வீரர்களில் இர்பான் பதான் (262) 7ஆவது இடமும், கும்ளே (212) 10ஆவது இடமும் பிடித்துள்ளனர்.

அடுத்து இங்கிலாந்து-தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா-இலங்கை அணிகளி டையே நடக்கும்டெஸ்ட்தொடரின்முடிவுகளைப்பொறுத்து தரவரிசைப் பட்டியலில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. (5)

## சம்பியன்ஸ் தொடரை நடாத்த தென்னாபிரிக்கா தயாராம்

### பாகிஸ்தானுக்கு புதிய சிக்கல்

(டர்பன்)

பாதுகாப்பு பிரச்சினை காரணமாக ஐ.சி.சி.சம்பியன்ஸ் தொடர் பாகிஸ்தானில் நடக்குமா என்பது சந்தேகமாகவுள்ளது. இத்தொடரை ஏற்று நடத்த தயாராக இருப்பதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அதிரடியாக அறிவித்துள்ளது.

உலக கோப்பை கிரிக்கெட் தொடருக்கு அடுத்து இரண்டாவது பெரிய தொடராக கருதப்படும் சம்பியன்ஸ் தொடர் (மினி உலக கோப்பை) வரும் செப்.11ஆம் திகதி பாகிஸ்தானில் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சமீபகாலமாக அங்கு பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்து வருவதை அடுத்து அவுஸ்திரேலிய அணி இத்தொடரில் பங்கேற்க தயக்கம் காட்டுகிறது. தொடரை வேறு இடத்துக்கு மாற்றும்படி வலியுறுத்தி வருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் பாகிஸ்தானில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்க அவுஸ்திரேலிய வீரர்கள் தயாராக இல்லை என அந்நாட்டு அணித்தலைவர் பொன்டிங்கும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவை தொடர்ந்து இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து வீரர்களும் தங்களது அச்சத்தை வெளிப்படுத்தினர். இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) மட்டும் தொடரை தள்ளிப் போடலாம் என பாகிஸ்தானுக்கு ஆதரவு அளித்து வருகிறது. இந்நிலையில் வீரர்களின் பாதுகாப்புதான் முக்கியம் என சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) தலைமை நிர்வாகி ஹரூன் லோர்கத் தெரிவித்ததை யடுத்து பாகிஸ்தானில் சம்பியன்ஸ் டி தொடர் நடக்கும் வாய்ப்பு குறைத்துவிட்டதாக தெரிகிறது.

இதையடுத்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி ஜெரால்ட் மஜோலா சம்பியன்ஸ் டி தொடரை நடத்த தாங்கள் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியது:

ஐ.சி.சி. கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் சம்பியன்ஸ் தொடரை நடத்த தயாராக இருக்கிறோம். இன்னும் இரண்டு மாதகால அவகாசம் மட் டுமே இருக்கிறது. என்றாலும் எங்களால் சிறப்பாக தொடரை நடத்த முடியும்.

நாங்கள் வாய்ப்பு கேட்கிறோம் என யாரும் கருத வேண்டாம். பாகிஸ்தானில், தற்போது நிலவும் மோசமான சூழ்நிலையால் தொடரை நடத்த முடியாது என ஐ.சி.சி. கருதினால் அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இம்முடிவை எடுத்துள்ளோம். அவர்களின் அறிவிப்புக்காக காத்திருக்கிறோம். இவ்வாறு மஜோலா தெரிவித்தார். (5)

## 2009 ஏப்ரலில் இலங்கை இங்கிலாந்திற்கு பயணம்

சிம்பாப்வேக்கு பதிலாக அடுத்த ஆண்டில் இலங்கை அணி இங்கிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. சிம்பாப்வே அணிக்கு இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ள அந்நாட்டு அரசு அனுமதி மறுத்ததை தொடர்ந்து இங்கிலாந்தில் 2009 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த இங்கிலாந்து சிம்பாவே அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் ரத்து செய்யப்பட்டது.

இதற்கு பதிலாக இலங்கை அணிக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது. இதற்கு இலங்கை கிரிக்கெட் சபையும் குறுகிய காலத்துக்குள் ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி இலங்கை-இங்கிலாந்து அணிகள் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மே மாதங்களில் இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்கான போட்டி அட்டவணையை இங்கிலாந்து கிரிக்கெற்சபை நேற்று முன்தினம் வெளியிட்டது. இதனிடையே இந்த போட்டி அட்டவணை குறித்து இலங்கை கிரிக்கெட் சபை நேற்று கூடி இறுதி முடிவு எடுத்ததாக அதன் நிறைவேற்று அதிகாரி துலிப் மென்டீஸ் தெரிவித்தார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்ட இந்த போட்டி,அட்டவணையின் படி இலங்கை அணியின் முன்னணி வீரர்க ளுக்கு இரண்டாவது இந்திய பிரிமியர் லீக் போட்டிகளில் பங்குபெறும் வாய்ப்பு பறிபோகும். இந்திய கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் இரண்டாவது ஐ.பி.எல். இருபது-20 தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி முதல் மே 29ஆம் திகதிவரை நடை பெறவுள்ளதாக ஏற் கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் விளையாட இலங்கை அணித் தலைவர் மஹேல ஜயவர்த்தன உள்ளிட்ட 13 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கை அணி அடுத்த ஆண்டு இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற் கொள்ளும் பட்சத்தில் மேற்படி 13 வீரர்களுக்கும் முதல் 10 நாட்களுமே ஐ.பி.எல். தொடரில் பங்கு பெறமுடியும்.

**போட்டி அட்டவணை**

ஏப்ரல் 21-23: இலங்கை-லஷெடர்ஷ யார் (லஷெஸ்டர்)

ஏப்ரல் 25-27: இலங்கை - ஏஸெக்ஸ் (செம்ஸ்போர்ட்)

ஏப்ரல் 29-மே 03: இலங்கை - இங்கிலாந்து லயன்ஸ்

மே 07-11: முதல் டெஸ்ட் (லோட்ஸ்)

மே15-19: 2ஆவது டெஸ்ட் (செஸ்டர்லேஸ்ட்ரீட்)

மே 21: இலங்கை -சமசெட் (டோன்டன்)

மே 24: முதல் ஒருநாள் போட்டி (பிரிஸ்டல்)

மே 27:2 ஆவது ஒருநாள் போட்டி (எஜ்பாஸ்டன்)

மே 30:3 ஆவது ஒருநாள் போட்டி (ஹெடிங்லி) (5)

## இங்கிலாந்து அணி புதிய சாதனை

சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இங்கிலாந்துக்கு எதிராக 4 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இங்கிலாந்து தென்னாபிரிக்க இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது.

ஸ்டெயின், மோர்னே மோர்கல், நிற்னி ஆகிய அசுர பந்துவீச்சாளர்களை கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, இங்கிலாந்துக்கு கடுமையான சவால் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிளின்டப் காயத்தில் இருந்து குணமடையாததால் அணியில் மீண்டும் இடம்பெறவில்லை.

இருப்பினும் வீரர்களுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டார். இந்த போட்டிக்கான இங்கிலாந்து அணியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. இதன் மூலம் டெஸ்டில் தொடர்ந்து 6 முறையாக மாற்றம் செய்யப்படாத முதல் அணி என்ற பெருமை இங்கிலாந்துக்கு கிடைத்துள்ளது. (5)

## ஒருநாள் போட்டியை 2 இன்னிங்ஸ் கொண்ட இருபது - 20 ஆக மாற்றப் பரிசீலனை!

(புதுடில்லி)

ஒருநாள் போட்டியில் மாற்றம் செய்யப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) அறிவித்துள்ளது. உள்நாட்டுஇருபது-20 போட்டிகள் ரசியர்கள் மத்தியில்சிறந்த வரவேற்பு பெற்றதால் ஒரு நாள் போட்டியின் முக்கியத்துவத்தை அதிகரிக்க இம் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இது குறித்து ஐ.சி.சி முதலமைச்சர் டேவ்ரிச்சர்ட்சன் அளித்த பேட்டியில் ஒரு நாள் டெஸ்ட் மற்றும் இருபது -20 கிரிக்கெட் மூன்றும் முக்கியமாக கருதப்படுகிறது. பாரம்பரியமான டெஸ்ட்போட்டி வீரர்களின் திறமையை வளர்ப்பதால் என்றும் முதலிடம் தரப்படும் ஒரு நாள் கிரிக்கெட் ஆரம்ப காலத்தில் 60 ஓவர் போட்டியாக நடத்தப்பட்டது. பின்னர்,50 ஓவர் போட்டியாக மாற்றப்பட்டது. உள்ளூர் போட்டியாக அறிமுகமான "இருபது-20" கிரிக் கெட் தற்போது சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவை கிரிக்கெட் வீரர்களின் பணம் சம்பாதிக்க சிறந்த வாய்ப்பைவழங்கி வருகிறது. குறைந்த நேரத்தில் அதிரடி பொழுது போக்கை வழங்குகிறது. இதனால் ரசியர்கள் மிகவும் ரசித்து பார்க்கின்றனர். ஐ.பி.எல் போன்ற அமைப்புக்கள் தனியார் உரிமையாளர் களுக்கு அணிகளை விற்றுள்ளன.

இருப்பினும் கிரிக்கெற் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் செயற்பட்டு வருவதால் பாதிப்பு ஏற்படாது வளர்ந்து வரும் சூழ்நிலையில் ஒருநாள்போட்டியின் ஈர்ப்பு குறைந்துவிடும் அபாயமுள்ளது. மக்கள் ரசனைக்கு ஏற்ற இந்தப் போட்டியில் மாற்றம்செய்யப்பட வேண்டும்.


40 ஓவர் இரண்டு இன்னிங்ஸ் கொண்ட "இருபது-20" போட்டி என்று இரண்டு திட்டங்கள் ஆலோசிக்கப்படும். ஒலிபரப்பு நிறுவனங்களுக்கு குறைந்தது 7 மணிநேர கால அவகாசம் தேவைப்படுவதால் இந்த இரண்டு மாற்றங்கள் மட்டுமே சாத்தியமாகும். அதிகளவிலான ஒருநாள் போட்டிகள் கிரிக்கெற் வளர்ச்சிக்கு எப்போதும் உதவாது. இவ்வாறு ரிச்சட்சன் கூறினார். (5)

# நேதீமுதல் கோயல்லவா வரை 33

### ஆங்கிலேயர் கண்டியைப் பிடித்தமை



கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமராசசிங்கன்



குதிரையில் வந்த பெரிய உத்தியோகத்தர் குதிரையை விட்டிறங்கித் தொப்பிகளைக் கழற்றி முழந்தாள் வரை குனிந்து மன்னனுக்குத் தமது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொடிகளால் ஏற்பட்ட கட்டுகள், தளைகளை நீக்கி மரியாதைசெய்து ஆறுதல் கூறி அவனுடைய பசி, தாகம் முதலிய தேவைகளை அன்புடன் விசாரித்தார்கள். பருகுவதற்கு என்ன இருக்கிறது என்று மன்னன் கேட்டபோது கேணல் காடி 'எங்களிடம் பிறண்டி, வைன், மதேறா, கிளறற், பீர் என்பனவும் நல்ல கோதுமை அப்பமும் உண்டு' என்று கூறினான். மன்னன் நீர் கலந்த மதேறா பருகித் தாகத்தைத் தீர்த் தான்.

மன்னனும் தேவிமார்களும் நன்றாக உடுக்குமாறு வசதிகளைச் செய்து கொடுத்த உத்தியோகத்தர், அவர்களைப் பல்லக்குகளில் ஏற்றித் தாம் குதிரை மேல் ஏறிக் காவல் சென்றனர். முன்னேயும் பின் னேயும் காலாட் படைகள் துப்பாக்கி ஏந்திச் செல்ல அவர்களுக்கிடையில் குதிரைப்படை கள் வாளேந்தி செல்லப் பல்லக்குகளில் மன் னனும் தேவிமார்கும் எடுத்துச் செல்லப்பட்டனர். சூரியஸ்தமன வேளையில் அவர்கள் டொயிலின்

**மீள் பார்வை**

இருப்பிடத்தை அடைந்தார் கள். டொயிலி இராச மரியாதையோடு மன்ன னையும் தேவியாரையம் வரவேற்றுபசரித்து அன்றிரவு அவர்களைக் கூடாரத்துள் சகல வசதி களுடனும் பாதுகாப்புடனும் கண் துயில வழிவகுத்தான்.

மன்னனின் வீரத்தையும் இராச களையையும் டொயிலி கண்டு வியந்தான். ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் தன் தாயையும் தேவியர்களையும் டொயிலிக்கு முறையாக அறிமுகஞ் செய்து வைத்தான். அவர்களுடைய உயிருக்கு எவ்வித ஆபத்தும் நிகழமாட்டாது என டொயிலி வாக்குறுதி கூறினான். மன்னனும் அவன் உறவினரும் மேஜர் கூக் தலைமையில் பாதுகாக்கப்பட்டார்கள். அவர்கள் வசதியாக வசிப்பதற்குக் கொழும்பிலே ஓரு வீடு ஒழுங்கு செய்யப் பட்டது. மன்னன் எவ்வித குறையுமின்றி அங்கே வசித்த காலத்தில் முகமலர்ச்சியோடு காணப் பட்டான். அவன் தான் முன்னர் விதித்த தண்டனைகள் யாவும் கண்டி அரசின் தண்டக் கோவையின்வண்ணம் அமைந்தவைஎன்றும் அதில் தன் செயல் எதுவும் இல்லை என்றும் கூறினான்.

ஆங்கிலேய்ர் கண்டியரசனை சில காலம் கொழும்பில் வைத்திருந்தபின் 24.01.1816 இல் அவன் குடும்பத்தாருடன் கோன்வாலிஸ் என்ற கப்பலில் ஓபிரையின் தலைமையில் சென்னைக்கு அனுப்பினார்கள். அங்கே வேலூரில் திப்புசுல்தானின் மைந்தன் இருந்த அரண்மனையில் அவனை இருத்தினார்கள். அங்கே அவன் பல வசதிகளோடும் வாழ்ந்து வந்த கால்த்தில் நீர்வீக்க நோயினால் 30.01.1832 இல் இறந்தான். அதுநிற்க.

கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியைக் கேட்டதும் ஆள்பதி பிறவுண்றிக் தமது இராப் போசன மேசையருகே எழுந்து நின்றாராம். அவர் எதுவுமே பேசமுன் அவருடைய கண் களினின்றும் ஆனந்தக் கண்ணீர் அருவிபோல வடிந்ததாம். இலங்கை முழுவதற்கும் ஆங்கிலேயரே ஆளுரிமை பெறுவதற்குத் தமக்குத் திருவருள் கிடைத்தமைக்கு அவர் துதி கூறினார். அரசாண் டவருக்கும் ஆளப்பட்டவருக்குமிடையில் இன, மத,மொழி பழக்கவழக்க அபிப்பிராய பேதங்கள் இருந்தமையால் அவர்கள் ஒற்றுமைப் படுவதற்குப் பொதுவான ஓர்

**க.சி.குலரத்தினம்**

அம்சமும் இருக்க வில்லை என ஆள்பதி கருதினார். அவர்க ளுக்கு இடையில் இருந்த பலவாய வேற்றுமைகள் அவர்களை ஒன்று பட விடாமற் தடை செய்தன என்றார்.

(தொடரும்)

# 5ஆம் தர புலமைப்பரிசில் வெற்றியாளர்களுக்கு 'கொமர்ஷல் வங்கி' 3 மில்லியனுக்கு மேல் வெகுமதி

2007ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலைகளில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களில் மிகச் சிறந்த பெறு பெறுகளைப் பெற்ற கொமர்ஷல் வங்கி அருணலு கணக்கு வைத்திருக்கும் 353 திறமையான மாணவர்களுக்கு வங்கியினால் ரொக்கப் பரிசுகள் வெகுமதியளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடசாலையிலும் முதலாவதாக வந்த மாணவர்களுக்கு ரூபா 10 ஆயிரம் இரண்டாவதாக வந்தவர்களுக்கு ரூபா 7 ஆயிரத்து 500உம் மூன்றாவது இடத்துக்கு வந்த மாணவர்களுக்கு ரூபா 5 ஆயிரம் வங்கியினால் வழங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ரொக்க வெகுமதிகளின் மொத்தப் பெறுமதி 3 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டதென்று வங்கி தெரிவித் துள்ளது.

இந்த ரொக்க வெகுமதிகளுக்கு மேலதிகமாக, தத்தம் மாவட்டங்களில் இப் பரீட்சையில் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற 353 மாணவர்களுக்குள் 4மாணவர்களுக்கு 2007 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அருணலு புதிய திட்டத்தின் கீழ் அவர்களின் கணக்கு மீதிகள் இரட்டிபாக்கப்பட்டது.

சிறு பராயத்திலிருந்தே கல்விப் புலமையை வளர்க்கும் அதேநேரத்தில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அருணலு சிறுவர்சேமிப்புகணக்கு 1998 ஆம் ஆண்டில் கொமர்ஷல் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டது. பரிசுத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்ட 2001 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமையாக பெறுபேறுகளைப் பெற்ற 870 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நாம் வெகுமதியளித்துள்ளோம் என்று கொமர் ஷல் வங்கியின் உதவி பொது முகாமையாளர் ரிச்சாட் ரொட்ரிகோ தெரிவித்தார். ஒரு சில அதிர்ஷ்டசாலிகளுக்கு மட்டும் வெகுமதி தரும் லொத்தர் திட்டங்களை நாடாமல் ஒவ்வொரு பாடசாலையிலும் முதல் மூன்று இடங்களுக்குள் வந்த ஒவ்வொரு அலுணலு கணக்கு வைப்பாளருக்கும் நாம் வெகுமதியளித்து வந்துள்ளோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அருணலு கணக்குகளை, கொமர்ஷல் வங்கியின் எந்தவொரு கிளையிலும் அல்லது சுப்பர் மார்க்கெட் கருமபீடங்களில் குறைந்த பட்ச வைப்பாக ரூபா 100 செலுத்தி ஆரம்பிக்க முடியும். பரீட்சைக் காலத்தில் பரிசுக்குத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச கணக்கு மீதமாக ரூபா 5000 வைத்திருக்க வேண்டும்.

1969 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை கொமர்ஷல் வங்கி நாட்டின் முன்னணி தனியார் துறை வங்கியாகத் திகழ்வதுடன் 166 கிளைகள் மற்றும் 314 க்கு மேற்பட்ட ATM களைக் கொண்ட கணனி வலையமைப்பினை கொண்டுள்ளது. அத்துடன் பங்களாதேஷில் 9 ரணத்து வமானகிளைகளைவைத்திருக் கிறது. உலகின் மிகவும் பிரசித்தி வாய்ந்த நிதி வெளியீடுகளில் ஒன்றான அமெரிக்காவின் குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் "இலங்கையில் மிகச் சிறந்த வங்கி" எனத் தொடர்ந்து 10 ஆண்டுகளாக தரச்சிறப்புப்பெற்றுள்ளது. அத்துடன் ஒரு பிரபல உலக வங்கியின் சஞ்சிகையான "த பாங்கர்" ஆறு ஆண்டுகளாக இலங்கையின் ஆண்டின் மிகச்சிறந்த வங்கி என்ற தரச் சிறப்பினை வழங்கியிருக்கிறது. 2007 ஜுலையில் "ரோமணி" என்ற பிரபலம் வாய்ந்த சர்வதேச நிதி சஞ்சிகையினால் "இலங்கையில் மிகச் சிறந்த வங்கி" என்ற தரச் சிறப்பினை இவ் வங்கி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# எண்ணெய் விலை அதிகரிப்பும் அதன் தாக்கங்களும்

*அறிமுகம்*

பெற்றோலிய் விலை துரிதமாக அதிகரித்துச் செல்லலானது இன்று உலகின் பெரும்பாலான நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. உலகின் பெரும்பாலான நாடுகள் எண்ணெய் இறக்குமதி நாடுகளாதலால் எண்ணெய் விலை அதிகரிப்பானது இந்த அனைத்து நாடுகளினதும் பொருளாதார வளர்ச்சியில் நேரடியாகவே பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. மேலும் எண்ணெய் விலை அதிகரிப்பானது பல பண்டங்களின் விலை அதிகரிப்புக்கு அதாவது பணவீக்கத்துக்கும் இறக்குமதி மற்றும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அதிகரிப்புக்கும் இவை அனைத்தினதும் விளைவாக பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைவதற்கும் காரணமாக அமைகின்றது. இதன்மூலம்,

- உலகில் எண்ணெய் பிரச்சினையின் படிப்படியான் வளர்ச்சி.
- தற்போதைய எண்ணெய் பிரச்சினைக்கு ஏதுவான காரணங்கள்.
- எண்ணெய் விலை அதிகரிப்பால் பல்வேறு பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற தாக்கங்கள்.
- எண்ணெய் விலை அதிகரிப்பு இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்.
- எண்ணெய் பிரச்சினைக்கான தீர்வுகள் .

இத்தகைய அம்சங்களை மிகத் தெளிவான முறையில் இங்கு வரையறுக்கப் பட்டு காணப்படுகின்றது.

**உலகின் எண்ணெய் பிரச்சினையின் படிப்படியான வளர்ச்சி**

1950 இல் இருந்து 1973 வரையிலான காலத்தினுள் (எண்ணெய்) ஒப்பீட்டளவில் மிகவும் இலாபகரமான வர்த்தகப் பண்டமாக விளங்கியது. 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 வரையான இரண்டு தசாப்தங்களினுள் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை அ.டொலர் 1.70 -1.93 இடையிலான மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தது. 1960 இல் எண்ணெய் இறக்குமதி நாடுகளின் அமைப்பு (Organization of petroleum Exporting Countries) எனும் (OPEC) அமைப்பு உருவாகிய போதும் 1974 ஆம் ஆண்டு வரை தெளிவான விலை அதிகரிப்பைச் செய்வதற்கு ஒபெக் அமைப்பினால் முடியாதிருந்த்து. எவ்வாறாயினும் ஒபெக் அமைப்பு பல்தேசியக் கம்பனிகளுக்கு செலுத்த வேண்டி இருந்த கட்டணங்கள் அதிகரித்ததன் விளைவாகவும் மத்திய கிழக்கு யுத்தம் காரணமாகவும் ஒபெக் அமைப்பு முதற் தடவையாக குறிப்பிடத்தக்க வீதத்தில் மசகு எண்ணெய்ப் பீப்பாவின் விலையை அதிகரிக்கச் செய்து உலகின் முதலாவது எண்ணெய்ப் பிரச்சினைக்கு வழி அமைத்தது. இதன்படி 1973 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அ.டொலர் 2.59 ஆக இருந்த ஒரு பீப்பாய் எண்ணெய்யின் விலை 1973 ஆம் ஆண்டின் இறுதியில் அமெ.டொலர் 5.12 ஆகவும் 1974 ஜனவரி ஒரு பீப்பாய் எண்ணெய் அமெ.டொலர் 11.95 ஆக விலை அதிகரிக்கப்பட்டு ஒரு ஆண்டினுள் ஒரே தடவையில் நூற்றுக்கு 361% ஆல் அதிக ரிக்கப்பட்ட வரலாற்று ரீதியான விலை அதிகரிப்பாக இருந்த இது முழுக் கைத்தொழில் உல கையும் ஆட்டம் காணவைத்தது.

1973இல் எகிப்து ஸ்ரேலைத் தாக்கியதன் காரணமாக ஸ்ரேலுக்கு உதவுகின்ற அனைத்து நாடுகளுக்குமான எண்ணெய் நிரம்பலை நிறுத்திவிடுமாறு அனைத்து அரேபிய நாடுகளுக்கும் கட்டளை இடப்பட்டதைத் தொடர்ந்து எண்ணெய் நிரம்பலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. மறுபுறம் நீண்டகாலமாக எண்ணெய் விலையை அரிகரிப்பது தொடர்பில் ஒபெக் அமைப்புக்கு இருந்த தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கும் வாய்ப்பாக இருந்தது.

**உலகின் எண்ணெய் விலை1950-1973**

| ஆண்டு | எண்ணெய் விலை (ஒரு பீப்பாய் அமெ.டொலர்) |
|---|---|
| 1950 | 1.70 |
| 1955 | 1.93 |
| 1957 மே | 2.08 |
| 1959 பெப் | 1.90 |
| 1960 செப் | 1.80 |
| 1970 ஜன | 1.80 |
| 1971 பெப் | 2.18 |
| 1972 ஜன | 2.48 |
| 1973 ஜன | 2.59 |
| 1973 ஏப் | 2.76 |
| 1973 ஜுன் | 2.90 |
| 1973 ஒக்-01 | 3.01 |
| 1973 ஒக்-16 | 5.12 |

*ஆதாரம்-மத்திய வங்கியின் அறிக்கை*

உலகின் 2ஆவது எண்ணெய் பிரச்சினை 1979-1980 காலப்பகுதியில் அறிக்கையிடப் பட்டது. இது "ஈரானியப் புரட்சி" எனப் பிரசித்தி பெற்றது. அதாவது "அயத்துல்லா குமேனி" எனும் முஸ்லிம் மதத் தலைவர் ஒருவர் 1978 இல் ஈரானிய ஆட்சியைக் கைப்பற்றியமையாகும். இதன்மூலம் மத்திய கிழக்கில் இஸ்லாமிய ஆதிக்கம் மீண்டும் பரவியது. இதன் காரணமாக ஈரானினதும் ஈராக்கினதும் எண்ணெய் வெளியீடுகள் வீழ்ச்சியடைந்தன. இதன் பெறுபேறாக ஒபெக் அமைப்பில் 1978 இல் அமெ. டொலர் 13.03 விலையாக இருந்த எண்ணெய் பீப்பாவின் விலை 1981 இல் அமெ.டொலர் 35.47 ஆக அதிகரித்தது. இந்த இரண்டாவது எண்ணெய் விலை ஏற்றம் காரணமாக இலங்கையின் இறக்குமதி செலவு 1980 இல் நூற்றுக்கு 42% ஆல் அதிகரித்ததோடு வர்த்தக நிலுவைப் பற்றாக்குறை அமெ.டொலர் 987 மில்லியனாக மாறியது. ஒட்டுமொத்த சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அமெ. டொலர் 192 மில்லியனாக இருந்தது. ஆயினும் 1981 ஆம் ஆண்டின் பின்னர் மீண்டும் உலக எண்ணெய் விலைகள் வீழ்ச்சிய டைந்ததோடு 1988 ஆம் ஆண்டாகும் போது ஒரு எண்ணெய்ப் பீப்பாவின் விலை அமெ. 14.56 வரை குறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து 1989-1990 வரையான கால கட்டத்தில் 3 ஆவது எண்ணெய் பிரச்சினை உருவாகியது. வளைகுடா பிரச்சினை எனப்படும் ஈராக் குவைத்தை ஆக்கிரமித்ததன் காரணமாக உருவாகிய இது ஒரு சிலமாதங்களில் தீர்க்கப்பட்டதோடு 1990 இறுதியில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை டொலர் 23.56 ஆக அதிரிகரித்தது. 1991 இல் மீண்டும் அமெ. டொலர் 19.50 வரை யாக குறைவடைந்த எண்ணெய் விலையானது 1997 இல் கூட 19.42 ஆக இருந்தது. 1997 இல் கிழக்காசியப் பிரச்சினை காரணமாக அந் நாடுகளின் வெளியீடுகள் குறைவடைந்தமை யாலும் பொருளாதார வளர்ச்சி வேகம் வீழ்ச் சியடைந்தமையாலும் உலகில் எண்ணெய்க்கான கேள்வி குறைவடைந்தது.

**சுந்தரராஜா சுமன்**
பொதுக்கலை,
3ஆம் வருடம்(2008),
யாழ்.பல்கலைக்கழகம்.

இதன் விளைவாக உலக எண்ணெய் விலை1998 இல் அமெ. டொலர் 13.47 வரை 6 டொலர்களால் குறைவடைந்தது. மீண்டும் படிப்படியாக அதிகரித்த இந்த எண்ணெய் விலை 2003 ஆம் ஆண்டின் இறுதியில் டொலர் 29.46 ஆக அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது 2006 ஜுலை 78 ஆக அதிகரித்தது.

உலக எண்ணெய் மற்றும் எரிவாயு சஞ்சிகையின்கணிப்பீடுகளின்படி இன்று உலகில் உள்ள பெற்றோலியத்தின் அளவு ஆயிரம் பில்லியன் பீப்பாக்களாகும்.

(தொடரும்)

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 8

பகுதி -II
நேரம் – 1மணி 15 நிமிடம்

வலம்புரி ஆசிரியர் குழு


**✠ கீழ்வரும் பகுதியை வாசித்து சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

**மேரி தன மகன் வலன்ரைன் உடன் வீட்டுக்குள் நுழையும்போது அவள் வீட்டில் இருந்து கறுப்புப் பூனை வெளியே பாய்ந்தது.**

இப் பந்தியில் இருந்து பின்வருவனவற்றுக்கு உதாரணம் தருக.

1. உயர்திணை பெண்பால் சொல் (..............................................)
2. உயர்திணை ஆண்பால் சொல் (..............................................)
3. எழுவாய் அடைமொழிச் சொல் (..............................................)
4. இறந்தகால வினைச்சொல் (..............................................)
5. அஃறினை ஒன்றன்பால் சொல் (..............................................)

**✠. கீழ்வரும் படத்தில் காணப்படும் இரண்டு தவறுகளை எழுதுக.**





6) (..............................................)

7) (..............................................)

3. கீழ்வரும் படத்தை அவதானித்து விடை எழுதவும்.

8) 'கிளே' யால் ஒட்டா நிலையில் நீரை புனலினுள் ஊற்ற தொடர்ந்து செல்லுமா?




(..............................................)


09) நன்கு கிளே பூசி ஒட்டிய நிலையில் நீரை புனலினுள் ஊற்றத் தொடர்ந்து போத்தலினுள் செல்லுமா?

(..............................................)

10) வினா(9) இல் உமது விடைக்கான காரணம் என்ன?

(..............................................)

✠ இப்படத்தை நன்கு அவதானித்து விடை எழுதுக.
அருகேயுள்ள படத்தில் காட்டியவாறு ஒழுங்குசெய்து





11. வெப்பமாக்கும்போது முதலில் விழும் குண்டூசி எது?

(..............................................)

12) இறுதியாக விழும் குண்டூசி எது?

(..............................................)

✠ உமது வகுப்பில் மின்காந்தமொன்றைத் தயாரித்தல் பற்றி நீர் கற்றிருக்கின்றீர். அத்தகைய ஒரு மின்காந்தத்தின் படம் கீழே தரப்பட்டுள்ளது.




இவ்வரிப்படத்தில் 1,2,3 என்னும் எண்களால் குறிக்க ப்படும் பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

13) 1. ..............................................

14) 2. ..............................................

15) 3 ..............................................

கீழ்வரும் செயற்பாடுகளுக்கான கரணத்தை விளக்கி எழுதுக.

16) சீமேந்துத் தரையில் ஊற்றப்பட்ட தண்ணீரை அகற்றுவதற்குப் பொலித்தீன் பைகளை பயன்படுத்தாது சாக்கினையே பயன்படுத்துகின்றனர்.

..............................................

17) சமையல் வேலைக்குப் பயன்படுத்தப்படும் உலோகக் கரண்டிக்கு மரப்பிடி போடப்பட்டுள்ளது.

..............................................

✠ ஒரு புத்தகக்கடையில் 5 மாணவர்கள் தெரிவுசெய்த பயிற்சிப் புத்தகங்களின் விபரங்கள் வருமாறு.

| மாணவர்கள் | புத்தகங்கள் |
|---|---|
| A | தமிழ், ஆங்கிலம், சமயம் |
| B | சமூகக்கல்வி, ஆங்கிலம், கணிதம் |
| C | ஆங்கிலம் |
| D | தமிழ், சமூகக்கல்வி |
| E | சமூகக்கல்வி, சமயம், ஆங்கிலம் |

18. கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவு செய்த பயிற்சிப் புத்தகம்.
1) தமிழ் 2) கணிதம் 3) ஆங்கிலம் 4) சமயம்

19. குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவு செய்த புத்தகம்.
1) தமிழ் 2) கணிதம் 3) ஆங்கிலம் 4) சமூகக்கல்வி

20. ஆங்கிலத்தைத் தெரிவு செய்த மாணவர் எண்ணிக்கை.
1) 1 1) 2 3) 3 4) 4

21. ஒரே ஒரு மாணவனால் மட்டும் தெரிவு செய்யப்பட் பயிற்சிப் புத்தகமும் மாணவனும் முறையே
1) சமயம் - A 2) கணிதம்-B 3) B–சமயம் 4) B–கணிதம்

22. ஆங்கிலத்தைத் தெரிவுசெய்யாத மாணவனும் சமூகக்கல்வியைத் தெரிவு செய்த மாணவர் எண்ணிக்கையும் முறையே.
1) D,3 2) D,4 3) 4,C 4) D,C

23. தமிழைத் தெரிவு செய்தோர்.
1) B ,C 2) A , D 3) C ,D 4) A ,D ,E

24 புத்தகக்கடை என்பதன் ஆங்கிலப் பதம்
1) Book Shop 2) Book Stop 3) Book Centre 4) Book Depo

25. சமூகக்கல்வி, ஆங்கலம் என்ற இரு புத்தகங்களையும தெரிவு செய்த மாணவர்ளின் எண்ணிக்கை.
1) 1 2) 2 3) 3 4) 4

26. ஊ என்ற மாணவன் தனது புத்தகத்தை இரவல் கொடுக்கவேண்டி ஏற்படின் அவனிடம் இரவல் கேட்கக்கூடிய மாணவன் யார்?
1) A 2) D 3) E 4) B

27. D இற்கு இரவல் கொடுக்கக்கூடியவர்களில் மிகவும் பொருத்தமானவர்கள்.
1) A E 2) BA 3) C B 4) E C

**✠ மாதவன் தான் நின்ற இடத்தில் இருந்து வடக்கு நோக்கி 10 m தூரம் நடந்து பின் மேற்கு நோக்கி 5 m தூரந் நடந்து பின் தெற்கு நோக்கி 10 m தூரம் நடந்து சொன்றார்.**

28. மாதவன் தான் நடக்க ஆரம்பித்த இடத்தில் இருந்து தற்போது எத்திசையில் உள்ளார்?

(..............................................)

29. மாதவன் தான் நடக்க ஆரம்பித்த இடத்தில் இருந்து தற்போது எவ்வளவு தூரத்தில் உள்ளார்?

(..............................................)

**✠ தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள இயல்புகளை பொருத்தமான திண்ம உருவின் கீழ் உள்ள புள்ளிக் கோட்டினில் எழுதுக.**

6 முகம், 12 விளிம்பு, 6 உச்சி, 6 விளிம்பு, 4 முகம், 9விளிம்பு

30) கனவுரு (..............................)
31) நான்முகி (..............................)
33) அரியம் (..............................)

**✠ பின்வரும் படங்கள் மூலம் காட்டப்படும் விளையாட்டுக்களைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுக.**







33)(..............................) 34)(..............................) 35(..............................)

✠ 36. 21.53 உடன் 34.8 இனை கூட்டுக. (..............................)

37. 0.7இனை பின்னமாக எழுதுக. (..............................)

✠ 38. $\frac{4}{7} = \frac{\boxed{1}}{21} = \frac{32}{\boxed{II}}$ என்னும் தொடர்பு உண்மையாக அமைய வேண்டும் எனில்

அ.கூடு 1 இன் அமையப் பொருத்தமான எண் எது?

(..............................)

ஆ.கூடு IIஇன் அமையப் பொருத்தமான எண் எது?(..............................)

39. $\frac{48}{216}$ என்னும் பின்னத்தின் மிகவும் எளிய வடிவம் என்ன?

(..............................)

✠ 40. சாம்பவியும் பவித்திராவும் பூக்களைக்கொண்டு மாலை கட்டினர். சாம்பவி கூடையில் இருந்த பூக்களில் $\frac{3}{8}$ பங்கையும் பவித்திரா $\frac{5}{16}$ பங்கையும் பயன்படுத்தினால் கூடையிலிருந்த பூக்களில் என்ன பங்கு பயன்படுத்தப்பட்டது?

(..............................................)

41. பாத்திமா கேக் ஒன்றின் $\frac{3}{10}$ பங்கைத்தன்தம்பிக்கும் $\frac{2}{5}$ பங்கை தன்தங்கைக்கும்கொடுத்தாள். அவள் இருவருக்கும் கொடுத்தது முழுக் கேக்கின் என்ன பங்காகும்?

✠ நீர் ஆலயத்திற்குச் சென்ற பொழுது ஆலய வசாலில் ஒரு மூதாட்டி படியில் தடுக்கி விழுந்து விட்டார். அதைக்கண்டதும் நீர் என்ன செய்தீர் என 4 வசனங்கள் எழுதுக. ஒவ்வொரு வசனமும் 4 செற்களுக்குக் குறையாமல் திருத்தமான வசன அமைப்பைக் கொண்டதாக அமையவேண்டும்.

42..............................................

43..............................................

44..............................................

45..............................................

## அகில இலங்கை தமிழ்தின ஆக்கப் போட்டியில் முதலிடம்



(கரவெட்டி)

இவ்வாண்டு நடைபெற்ற, அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு-1 ஆக்கப் போட்டியில் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவன் பா. வினோஜன் முதலிடம் பெற்று, தான் கல்வி கற்கும் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். (அ-98)

## சிறுபோக நெல் அறுவடை விழா

(யாழ்ப்பாணம்)

சிறுபோக நெல் அறுவடை விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயில் அருகாமையில் உள்ள வயல் முன்றலில் க.தங்கவேலாயுதம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் வை.பாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## கல்விக் கண்காட்சி

(அல்வாய்)

கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் கலந்துகொள்வார். (ஓ-19)

## பல்லூடக சாதனப் பயன்பாடு பற்றிய செயலமர்வுகள்

(அல்வாய்)

பல்லூடக சாதனப் பயன்பாடு -2008 செயலமர்வுகள் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளதால் கடந்த அதிபர் கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானங்களின் அடிப்படையில் பொருத்தமான இரு ஆசிரியர்களை அனுப்பி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இச் செயலமர்வுகள் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணக் கோட்ட ஆசிரியர்களுக்கும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை நல்லூர் கோட்ட ஆசிரியர்களுக்கும் காலை 8.30 மணி தொடக்கம் 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் மதிய உணவு, மற்றும் எழுது பொருட்களைக் கொண்டு வருமாறு யாழ்.வலயக் கல்விக் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-19)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சிறு கைத்தொழில் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சிறு கைத்தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக பன்ன வேலைப் போட்டிகள் இன்று வெள்ளிக் கிழமை கொக்குவில் பிரதேச சபை நூலக கேட்போர் கூடத்தில் மாதர் சங்கத்தினருக்கு இடையில் நடைபெற இருப்பதாக் பிரதேச சபை செயலாளர் மேரியோசேப் சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (அ-6)

# பருத்தித்துறைப் பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாடிக் கட்டடத் திறப்புவிழா இம் மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு பரு.பிரதேச செயலாளர் இ. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இத் திறப்பு விழாவையொட்டிய மலர் வெளியீடும் இங்கு இடம்பெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொண்டு புதிய கட்டடத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைப்பார்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா, பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு பேனாட் றெக்னோ அடிகளார் ஆகியோர் ஆசி வழங்குவர்.

சிறப்பு விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.மாவட்ட மீள் எழுச்சித் திட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.விஸ்வலிங்கம், கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் (மத்தி) செல்வி கே. வசந்தி ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களா யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், மருதங்கேணி உதவி அரச அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.அ.நடராஜா, வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர் கு.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மலர் வெளியீட்டுரை யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாமணி நிகழத்த்துவார். பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் சிறப்பு மலரை வெளியிட்டு வைப்பார். (அ-52,19)




## வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம்

# பற்றீசியன் அணி அரையிறுதிக்கு தெரிவு சேர்ச்சில் 160 ஓட்டங்கள் பெற்று சாதனை

(யாழ்ப்பாணம்)

வீ.டி.ஜெயரட்சணசிங்கம் வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டியின் 3ஆவது கால் இறுதிப் போட்டியில் பற்றீசியன் அணி 210 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணிக்கும், பற்றீசியன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக் கழ்க அணி 50 ஓவர்களில் 7விக்கெற் இழப்பிற்கு 355 ஓட்டங்களை பெற்றது. ஜெயந்தன் 41, சேர்ச்சில் 160, ஜனகன்ராஜ் 42 ஓட்டங்களையும் றஞ்சிற் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களைப் பெற்றனர். சேர்ச்சிலின் 160 ஓட்டங்கள் யாழ். நகரில் 50 ஓவர் கொண்ட சுற்றுப் போட்டிகளில் ஓர் தனி நபர் பெற்ற ஆகக் கூடிய ஓட்டங்களென்பது குறிப்பிடத்தக்கது. சுகிர்தன் 2 விக்கெற்றுக்களையும், செல்வ்ராசா, கஜதீபன் ஆகியோர் தலா 1 விக்கெற்றையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி 31.4 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 145 ஓட்டங்களை பெற்றது. றஞ்சித் 5 விக்கெற்றுக்களையும், நிரோஸன் 2விக்கெற்றுக்களையும், நிஸாந்தன், முகுந்தன், றெக்னோ ஆகியோர் தலா 1விக்கெற்றையும் கைப்பற்றினர். (அ)



சேர்ச்சில்

# வலிகாம வலயப் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலயத்திற்குட்பட்ட தரம் 2 பாடசாலைகளான ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை, மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை, பண்டத்தரிப்பு றோ.க.த.க.பாடசாலை, குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம் மற்றும் தரம் 3 பாடசாலைகளான கட்டுடை சைவ வித்தியாலயம், சுதுமலை அ.த.க.பாடசாலை, ஏழாலை மேற்கு அ.மி.த.க.பாடசாலை, வட்டு சுப்பிரமணிய வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின். அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளது.

தரம் II பாடசாலைகளிற்கு இலங்கை அதிபர் தரத்தைச் சேர்ந்த 2-I, 2-II(பட்டதாரி) ஆகியோர்களிடம் இருந்தும், இலங்கை ஆசிரியர் சேவை தரத்தைச் சேர்ந்த I, 2-I, 2-II (பட்டதாரி) ஆகியோர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தரம் III பாடசாலைகளிற்கு இலங்கை அதிபர் தரத்தைச் சேர்ந்த 2-II, IIIஆகியோர்களிடம் இருந்தும் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த 2-IIவும் அதற்கு மேற்பட்ட தகுதி உடையவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப் படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயத்தைச் சேர்ந்தவர்களை வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி பதவிகளுக்கு வலிகாமம் வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தொண்டைமானாறு வீ.ம.வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும். (அ-35)

◆◆◆◆

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் "மகாபாரதக் கதை" என்னும் விடயம் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்படும். (அ-35)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய புற்றளை மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை அதிபர் எம். அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத் துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (அ-52,19)

◆◆◆◆

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் அறிவித்துள்ளார்.

இப் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-52)

## மரக்கொப்புகள் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கான வதிவிடத்தில் உள்ள (பழைய பூங்கா) மரக் கொப்புக்கள் எதிர்வரும் 28 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

மரக்கொப்புக்களை கொள்வனவு செய்ய விருப்புபவர்கள் அன்றைய தினம் பழைய பூங்காவுக்கு வந்து ஏலத்தில் கலந்து பணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் க.கணேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.


மரக்கொப்புக்களை பார்வையிட விரும்புவர்களை யாழ்.மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளுமாறும் யாழ்.அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-4)

## பொருளியல் பாடம் இலவசக் கருத்தரங்கு


க.பொ.த.(உ/த) மாணவர்களிற்கான பொருளியல் பாட இலவசக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.நகர் மைய றோட்டறக்ற் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கினை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் வே.கருணர்கரன் நடாத்தவுள்ளார்.

பொர்ருளியல் கற்கும் அனைத்து மாணவர்களையும் இக் கருத்தரங்கில் கலந்து பயனடையுமாறு யாழ்.நகர் மைய றோட்டறக்ற் கழக சமூகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ-6)







கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் சுனாமி வாழ்வாதார திட்டப் பிரிவினரால் அண்மையில் சக்கோட்டை, இன்பருட்டி, மயிலிட்டி துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீன் சுழற்சிமுறை கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த 1.6 மில்லியன் ரூபாய் மானியமாக வழங்கப்பட்ட நிகழ்வில் ஆசியுரையை சக்கோட்டை பங்குத்தந்தை அருட்திரு பத்திநாதர் அடிகளார் வழங்குவதையும், பயனாளி ஒருவருக்கான காசோலை பத்திரத்தை கரித்தாஸ் - கியூடெக் பிரதிநிதி க.அனீதன் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம்.

# தேவையேற்பட்டால் கருணா மீது விசாரணை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 1990 ஆம் ஆண்டு மூதூரில் 400 பொலீசார் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தேவைப்பட்டால் கருணாவிடம் விசாரணை நடத்தப்படும் என தேசிய பாதுகாப்பு பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரமபுக்வெல தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய



கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இந்தப் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு ஏற்கனவே விசாரணை ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கருணா அம்மான் நாடு திரும்பியுள்ள நிலையில்இது தொடர்பாக இன்னமும் அவரிடம் எந்த விசாரணைகளும் நடத்தப் பட வில்லையே என ஊடகவியலாளர் கேள்வியெழுப்பினர். தேவை ஏற்பட்டால் அவர் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என கெஹலிய ரம்புக்வெல பதிலளித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் அமைப்பில் இராணுவப்பிரிவுக்குப்பொறுப்பாக இருந்த காலத்தில்பொலிஸார்கைது செய்யப்பட்டு தனது கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப் பட்டிருந்ததாகவும் ஆயினும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே அவர்கள் கொல்லப்பட்டதாகவும் கொழும்பு ஊடக மொன்றிற்கு வழங்கியிருந்த செவ்வியில் கருணா கூறியிருந்தார்.

அவர்கள் கொல்லப்படுவதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனது கட்டுப்பாட்டின் கீழிருந்த பொலிஸாரை யாழ்ப்பாணம் அழைத்துச்செல்வதற்காக பொட்டம்மானிடம் கையளிக்கும்படியே எனக்குக் கூறப்பட்டது இந்தக் கொலைகளுடன்நான் நேரடியாகத் தொடர்பு படவில்லை என கருணா தெரிவித்திருந்தார். (அ)

# இலங்கை இந்தியாவுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை

(கொழும்பு)

சீபா எனப்படும் இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையிலான பொருளா தாரம ஒத்துழைப்பு உடன்படிக்கை எதிர் வரும் சார்க் உச்சி மகா நாட்டின் போது கைச்சாத்திடப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்திய வர்த்தகத் தொழில் துறை அமைச்சின் செயலாளர் கோபால் கேபிள்ளை நேற்று முன்தினம் இந்த அறிவிப்பைவிடுத் துள்ளார்.

இந்தியா சார்க் பிராந்திய நாபொன்றுடன் செய்து கொள்ளும் முதலாவது உடன் படிக்கை இது வென அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்தியா2005 ஆம் ஆண்டில் சிங்கப்பூருடன் இது போன்றதொரு உடன்படிக்கை செய்து கொண்டதாகவும் கோபால்கேபிள்ளை தெரிவித்துள்ளார். இந்த உடன்படிக்கை பொருட்கள், சேவைகள், கல்வி மற்றும் சுங்கத்திணைக்களங்கள் ஆகிய துறை களின் வர்த்தக நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகவும் அவர் தெரிவித் தார்.

இந்த உடன்படிக்கையின மூலம் 2012ஆம் ஆண்டளவில் இலங் கையின் வார்த்தக இயலளவு 1.5 மில்லியனாக அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# ஐ.தே.கவின் மூன்று எம்.பிக்கள் அரசாங்கத்துடன் இணையவுள்ளனர்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக்கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாகத் தேச நிர்மாண அமைச்சர் எஸ்.எம்.சநதிரசேன தெரிவித்துள்ளார்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தற்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வடமத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவது குறித்துத் தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கம் நிச்சயமாக வெற்றி பெறும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இரு தொழில்நுட்பங்களில் இயங்கும் புதியரக செல்போன்

ஜிஎஸ்எம் மற்றும் சிடிஎம்ஏ என 2 தொழில்நுட்பங்களிலும் இயங்கும் திறனுள்ள புதியரக செல்போன்களை மெரிடியன் மொபைல் நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது.

இதன்படி மெரிடியன் மொபைல் நிறுவனத்தின் ஃப்ளை பிராண்ட்-ன் V80, V80i, B700 மற்றும் B720 ரக செல்போன் களில் 2சிம் காட்டுகளை பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.85இன்ச் டி.எஃப்டி வண்ணத்திரை. 200 எஸ் எம் எஸ் சேகரிக்கும் வசதியுடன் கூடிய V80 ரக செல்போனின் விலை ரூ 4490 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. V80i ரக செல் போனில் கூடுதலாக எஃப்எம் ரேடியோ மற்றும் ஸ்பீக்கர் போன் உள்ளது.

இதேபோல் B700ரக செல் போனில் 2 மெகா பிக்சல் கேமரா புளுடூத், ஜிபிஆர்எஸ், மெமரி ஸ்லாட் வசதிகள் உள்ளது. இதன் விலை ரூ7200ஆக நிர்ணயிக்கப் பட்டுள் ளது.



எட்ஜ் (EDGE) தொழில் நுட்பம் உட்பட பல்வேறு சிறப்பம் சங்களைக் கொண்ட B720 Duoரக செல் போனின் விலை ரூ8900 என மெரிடியன் மொபைல் வெளியிட்டுள்ள குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அப்பிள் நிறுவனத்தின் ஐ-போனில் "கூகிள் ரோக்" வசதி



அப்பிள் நிறுவனத்தின் புதிய ஐ-போனில் கூகிள் சோக் (Google Talk)வசதி இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சஃபாரி வெப் பிரவுஸரில் (Safari Web browser) இயங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த கூகிள் ரோக் மென்பொருள் அப்பிள் ஐ-போன் சாதனத்திற்காக பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டதாக கூகிள் நிறுவனம் தெரி வித்துள்ளது.

இது தொடர்பாக கூகிள் வலைப்பதிவில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ள கூகிள் சோக் மென்பொருள் ஐ-போன் சாதனத்தில் நவீன சிறப்பம்சங்களுடன் இயக்கும் என்றும் இதற்காக மேலும் எந்த மென்பொருளையும் வாடிக்கையாளர்கள் பதிவிறக்கம் செய்யத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது டெஸ்க்-டாப் கணனிகளில் பயன்படுத்தும் கூகிள் ரோக் பிரவுசரில் இருந்து ஐ-போன் கூகிள் ரோக் சற்றே வித் தியாசமாக இருக்கும் என்றும் கூகிள் கூறியுள்ளது. (அ)

# ரணிலை விரட்டியடித்து விட்டு ருக்மனைத் தலைவராக்குங்கள்

## ஐ.தே.கவுக்கு அமைச்சர் நிமல் ஆலோசனை?

(கொழும்பு)

அரசாங்கத்தை கலைப்பதற்கு முன்வருமாறு மக்களுக்கு அழைப்பு விடுவதற்கு முன்னர் உங்கள் தலைவரை விரட்டியடித்து ருக்மனை தலைவராக கொண்டு வாருங்கள் என்று சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா ஆவேசமாக கூறினார்.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் எம்.பி.யுமான ஜோசப் மைக்கல் பெரேரா சபையில் முன்வைத்த விஷேட கூற்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் கூறியதாவது,

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி.விசேட கூற்று என்ற போர்வையில் தொடர்ந்தும் ஒரே விடயத்தையே முன்வைத்து வருகின்றார். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு குறித்து இப்போது மட்டுமல்ல முன்னரும் பலமுறை விசேட கூற்றுக்களாக முன்வைத்துள்ளார்.

இந்த பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தின் தரப்பில் பலமுறை பதிலளிக்கப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் மீண்டும் ஒரே விடயத்தை விஷேட கூற்றாக முன்வைக்காமல் நாட்டிற்கு மிக முக்கியமான தேசிய பிரச்சினைகளை முன்வைப்பதற்கு இந்த நேரத்தை பயன்படுத்த வேண்டும்.

நாட்டு மக்கள் அரசாங்கத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள இரு மாகாண சபை தேர்தலின் போது மக்களின் தீர்ப்பு என்னவென்று தெரியவரும்.

எனவே, இந்த அரசாங்கத்தை கலைத்து வீட்டுக்கு அனுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களிடம் அழைப்பு விடுப் பதற்கு முன்னர் , உங்கள் தலைவரை விரட்டியடியுங்கள். ருக்மனை தலைவராக்குங்கள். இது எங்கள் பிரச்சினையல்ல. அரசாங்கம் மக்களுக்கு நன்கு சேவையாற்றியுள்ளது.

எனவே எதிர்வரும் தேர்தலில் நாம் வெற்றி பெறுவது உறுதி. (அ)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு ★ 09 ★ 11 ★ 1980

உதிர்வு ★ 28 ★ 05 ★ 2008



அமரர்

## மகேந்திரன் வரதன் (சந்திரன்)

உன்னை தூக்கி வளத்தோமடா நீ எங்கு சென்றாய்
எந்நேரம் சிரித்த முகத்துடன் எம்மைத்தேடி வருவாயடா
ஏனிந்த அவசரமோ காலனவனிற்கு பரிதவிக்கின்றோம் நாம் இங்கு
வெறுங்கூடாய் எம் உடல்நிலை தளர்வதைப் பாராயோ
ஆறவும் வழியின்றி தேறவும் முடியாமல் மாய்கின்றோமையா
மீளவும் எமை வந்து பாராயோ வரதாமீளாத்துயில் கொள்ள
முடிகின்றதோ வரதா உனதன்பு உறவுகள் தவிப்பதை அறியாயோ

எமது அன்புத்தெய்வத்தின் பிரிவுச்செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவி புரிந்தோருக்கும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வழங்கியவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். வீட்டுக்கிரியைகள் இன்று (11.07.2008) வெள்ளிக்கிழமை மு.ப.11.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

(அழைப்புக்கிடைக்கப் பெறாதவர்கள் தயவுசெய்து இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

1449

உன்பிரிவால் துயருறும் கதிரவேலு குடும்பத்தினர்

1ஆம் ஒழுங்கை, மாவடிச்சந்தி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

ஆடுகளின் ஒற்றுமை - சிங்கத்தைப் பட்டினியாகப் படுத்திருக்கச் செய்கிறது.

-ஸான்ஸியார்

வலம்புரி

## தெற்கில் சூடு பிடித்த தொழிற்சங்கப் போராட்டம்

நேற்றைய தினம் நாடு பூராகவும் தொழிற் சங்கப் போராட்டம் நடந்தேறியுள்ளது.

தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நடத்திய பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை தடுத்து நிறுத்த அரசு தீவிர முயற்சி மேற்கொண்ட போதிலும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் வெற்றி கண்டது.

இங்கு தொழிற்சங்கப் போராட்டம் வெற்றி கண்டதா? அல்லது தோல்வி அடைந்ததா? என்பது ஆய்வுக்குரிய விடயமல்ல.

மாறாக தொழிற்சங்கப் போராட்டம் நடத்த வேண்டுமென்ற சிந்தனை தலைதூக்குவதே அரசுக்கு தலையிடியைக் கொடுக்கப்போதுமானது. அதுமட்டுமன்றி இத்தகைய தொழிற்சங்கப் போராட்டங்கள் தொடர்ந்து இடம்பெறும் எனவும் எதிர்பார்க்க முடியும்.

பொதுவாக இலங்கையின் ஆட்சியாளர்களில் அநேகர் பொருளாதார சிந்தனைகளைப் பற்றி இம்மியும் கருத்தில் எடுப்பதில்லை.

அதாவது யுத்த செலவு தொடர்ந்து அதிகரித்துச் செல்லுமாயின் நாட்டில் பணவீக்கம் தலைவிரித்தாடும் என்ற உண்மையை உணர்ந்து கொள்ளாத அரசு இருக்கும்போது நாடு நொந்து கெட்டு நூலாகிப் போவது தவிர்க்க முடியாததே.

பொதுவாக பணவீக்கம் உச்சமடையும் காலத்தில் தொழிற்சங்கப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்ற யதார்த்தம் இலங்கையில் நிருபணமாகியுள்ளது.

ஆயினும் தொழிற்சங்கப் போராட்டத்தை எப்படியும் முறியடிக்க முடியும் என்பது அரசின் நினைப்பு.

ஆனால் தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்து போராட்டம் நடத்துமாயின் அதனை எவராலும் தடுக்கவோ -தவிர்க்கவோ முடியாது போகும்.

தொழிற்சங்கம் என்ற சொற்பதத்தின் பின்னால் பொதுமக்கள் என்ற மாபெரும் சக்தி இருப்பதை அரசு மறந்துவிடக்கூடாது.

தொழிற்சங்கப்போராட்டங்களில் ஈடுபடுவதற்கு எந்த அரச பணியாளரும் விரும்புவது கிடையாது. தனது தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்பதே ஒவ்வொருவரினதும் அடிப்படையாகும்.

இந்த அடிப்படையை மீறி பணிப்புறக்கணிப்பு செய்கிறார்களெனில் எடுக்கின்ற ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்த முடியாதென்பதே ஆகும்.

எனவே நாடு அமைதியாக -சமாதானம் நிறைந்ததாக மாறவேண்டுமாயின் முதலில் யுத்தத்தை நிறுத்தி அதற்கான செலவை இல்லாதொழிக்க வேண்டும்.

இலங்கையில் யுத்தம் நிறுத்தப்படுமாயின் உலக நாடுகள் உதவி வழங்க முண்டியடிக்கும்.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது, தொழிற்சங்கப்போராட்டத்தை தடுத்து நிறுத்துவதில் காலத்தை செலவிடாமல் யுத்தத்தை நிறுத்துவது பற்றி சிந்தித்தால் அது பெரும் புண்ணியமாகும்.

# தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட்டிருந்தால் இரத்தம் சிந்தும் நிலை ஏற்பட்டிருக்காது

### சபையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தெற்கிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளும் சுதந்திரமும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் இரத்தம் சிந்தும் நிலை ஏற்பட்டிருக்காது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

யுத்தத்தில் காட்டும் ஆர்வத்தை அரசாங்கம் அரசியல் தீர்வில் காண்பிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சிவசக்தி ஆனந்தன் எம்.பி.மேலும் கூறியதாவது,

மன்னார் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வந்த மக்கள் கண்ணிமோட்டை பகுதியில் நலன்புரி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அந்த முகாமில் 200 குடும்பங்களைச் சேர்ந்த 500 பேர் உள்ளனர். அவர்கள் அங்கிருந்து தமது உறவினர், நண்பர்கள் வீடுகளுக்கு செல்வதற்கும் அனுமதிக்கப்படவில்லை.

இவர்களில் ஏற்கனவே அகதிகளாக இந்தியாவுக்கு சென்று அங்கு அகதி முகாம் வாழ்க்கையை வெறுத்து மீண்டும் தாய்நாடு திரும்பியவர்களும் இந்த நலன்புரி முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன.

எனவே, அரசாங்கம் மனிதாபிமான முறையில் சிந்தித்து நலன்புரி முகாமிலிருந்து வெளியே செல்ல விரும்புபவர் களுக்கு அதற்கான வழிவகைகளை செய்ய வேண்டும்.

வடக்கில் உள்ள மக்கள் தெற்கில் உள்ள மக்கள் அனுபவித்து வரும் உரிமைகளை நினைத்தும் பார்க்க முடியாத நிலையில் உள்ளனர்.

அரசாங்கம் விடுதலைப்புலிகளை குறைகூறி குற்றஞ்சாட்டுவதிலேயே காலத்தை கழித்து வருகிறது. புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர விரும்பவில்லை என குற்றஞ்சாட்டும் இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு என்ன தீர்வை முன்வைத்துள்ளது என கேட்க விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணம் மட்டுமல்ல மன்னாரும் வவுனியாவும் திறந்தவெளிச்சிறைச்சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. நாங்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை கேட்கவில்லை.

மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கான மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறே கேட்டுக்கொள்கின்றோம் என்றார். (அ)

# நோயாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த சாசனம் தயாரிக்க நடவடிக்கை

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

நோயாளர்களின் பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கான நோயாளர் சாசனம் ஒன்றை தயாரிக்கும் நடவடிக்கையில் சுகாதார நலன் பேணல் மற்றும் போசாக்கு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

நோயாளிக்கும் வைத்தியருக்கும் இடையே சட்ட வரையறை இந்த புதிய சாசனம் ஏற்படுத்துவதுடன் நோயாளர்களுக்கான நீதி நெறிகளையும் அறிமுகப் படுத்தவுள்ளது.

நோயாளர்களின் பாதுகாப்பு நிமித்தம் பல நாடுகளில் நோயாளர் சாசனம் அமுலில் இருப்பதாகவும் இலங்கையில் நீண்டகால தேவைப்பாடாக இருந்து வந்தது எனவும் சுகாதார நலன் பேணல் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நோயாளர் சாசனம் இல்லாததன் காரணமாக சுகாதாரத்துறையில் பல பிரச்சினைகள் எழுந்ததாக அமைச்சர் சுட்டிகாட்டியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்கள இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒதுழைப்புடன் நோயாளர் சாசனம் தயாரிக்கப்படவுள்ளது. வெளிநாடுகளில் நடைமுறையில் உள்ள நோயாளர் சாசனம் தொடர்பாக ஆராய விசேட குழு ஒன்று நியமிக்கப் படவுள்ளதாகவும் அதன் பின்னர் இந்த நாட்டிற்குரிய நோயாளர் சாசனம் தயாரிக்கப்படும்எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்லவா தெரிவித்துள்ளார்.

நோயாளர் சாசனம் தயாரிப்பதற்கான ஆரம்பக்கூட்டம் வைத்திய தேவைகள் உதவிப்பணிப்பாளர் நாயகம் டாக்டர் விமல் ஜெயந்த தலைமையில் அடுத்த மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

# இந்திய -அமெரிக்க ஒப்பந்தத்திற்கு ஜி 8 நாடுகள் ஆதரவு தெரிவிப்பு

இந்தியா அமெரிக்கா அனு ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு ஜி8 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஜப்பானிய டோக்கியோ நகரில் இடம்பெற்ற ஜி 8 மகாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சர்வதேச அணு முகவராண்மை அணு தொழில் நுட்ப வணிகர் குழு உள்ளிட்ட நிறுவனங்கள் இந்தியாவின் அணு ஆயுத பரவல் தடுப்பு கொள்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் நிலையில் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவது குறித்து ஆலோசிக்க விருப்பதாக அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

அணு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவின் எரிபொருள் தேவைகள் பூர்த்தியாவுடன் உலகளாவில் அணு ஆயுதப் பரவல் தடை மண்டலங்களை ஊக்குவிக்கவும் அந்த ஒப்பந்தம் உதவும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (அ)

# வெள்ளி நற்சிந்தனை 28

## பக்தியின் மொழி தமிழ்

கோவில் வழிபாட்டில் மலர்கள் இன்றியமையாதவை. இறைவனுக்கு உகந்த மலர்களை எடுத்துச் செல்லும் வழக்கம் பண்டையக்காலத்திலிருந்தே காணப்படுகிறது. குன்றிலே வாழும் குறவனுடைய செல்வ மகள் வேங்கை மலர் களை எடுத்துச்சென்று மலையிலே உறைகின்ற கடவுளை வழிபட்டதாக சங்க இலக்கியத் தொகுப்பு நூல்களுள் ஒன்றான ஐங்குறுநூறுபதிவு செய்துள்ளது. ஆனால் திருநாவுக்கரசர் தாம் வாழ்ந்த காலத்தில் கோயிற் சூழலே மலர்த்தோட்டங்களால் பொலிவு பெற்றிருந்தமையைக் குறிப்பிடுகிறார். இறைவனுடைய பாதங்களில் அன்றலர்ந்த மலர்களை தூவி தொழுது வணங்குவதால் பயன் உண்டு எனக் கூறுகிறார்.

நாவுக்கரசர் உழவாரப்படையாளி என்று சிறப்பிக்கப்பட்டவர். கோவில் சூழலை அழகுபடுத்துவதற்காக உழவாரம் கொண்டு தேவையற்ற புல் பூண்டுகளை அழித்தவர் அந்த இடங்களில் இறைவனைத் தொழுவதற்குச் செல்கையில் எடுத்துச் செல்ல மலர்ச் செடிகளை அமைக்கலாம் என்பது அவருடைய நோக்கமாகும். வழிபாடு செய்வதற்கும் இறைவனுக்குச் சூட்டுவதற்கும் கோவிற் சூழலில் பூந்தோட்டங்கள் அமைக்கப்பட்டன.

மலர்களை எடுத்துச்செல்லும் போது பொன்னியன்ற தட்டத்திலே எடுத்துச் செல்ல வேண்டும். செருந்தி கோங்கு பெரிய மடல்களையுடைய தாழை என் பன நிறைந்த பொழில் பொருந்திய கோயில் திருச்சாய்க்காடு. பரந்த இடத் திலே பல்வேறு மலர்களும் கொண்ட செடி, கொடி, மரம் என்பன நிறைந்திருப் பதால் அவ்விடம் பொழில் என அழைக் கப்பட்டது.தாழை மரம் நிற்குமிடத்திலே எப்போதும் நறுமணம் வீசிக்கொண்டிருக்கும். எல்லா மலர்களையும் விடத்தாழை மலருக்கு நறுமணம் அதிகம்.

ஆனால் அம் மலர் கோவிலினுள் எடுத்துச் செல்லப்படுவதில்லை. அதனால் நறுமணமுடையதாகத் திகழச் செய்யும் மலர் என நாவுக்கரசர் குறுப்பிட்டுள்ளார். தாழை முருக்குயிர்க்குங் காவிரிப் பூம்பட்டினம் என திருச்சாய்க்காடு தலம் அமைந்த பட்டினத்தை சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இறைவழிபாட்டுக்குரிய மலர் உடன லர்ந்த மலராக இருக்க வேண்டும் மலரின் நறுமணமும் குளிர்ந்த இயல்பும் அதனைத் தூவி வழிபாடுசெய்யும் போது ஏற்படும் பரவச உணர்வும் திருநாவுக் கரசர் பெற்ற அனுபவமாகும் அதனைப் பிறரும் உணரவேண்டுமென விரும்புகிறார். மலர் தூவிக்கை கூப்பித் தொழுது வணங்குதல் என வழிபாட்டின் முறைமையையும் விளக்கிக் காட்டுகிறார் மலர்பண்பாடு ஒன்று வழிபாட்டுடன் இணைந்து இன்று வரை தொடர்கிறது அப்பரின் உள்ளத்திலே இறைவன் உறைகின்ற கோயிற் சூழல் அழகாகவும் மனம் கவரும் வகையி லும் இருக்க வேண்டுமென்ற பெருவிருப்பம் இருந்ததைப் பாடல் காட்டுகிறது.

"கட்டலர்ந்த மலர் தூவிக் கைதொழு மின் பொன்னியன்ற
தட்டலர்ந்த பூஞ்செருந்தி கோங்க மருந் தாழ் பொழில்வாய்
மொட்டலர்த்த தடந்தாழை முரு குயிர்க் குங் காவிரிப்பூம்
பட்டினத்துச் சாய்க்காட்டெம் பரமேட்டி பாதமே"

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

## கொக்குவிலில் திருட்டு

கொக்குவில் பொற்பதி வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இரண்டு வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதன் போது 26 பவுண் நகைகளும் ஓர் இலட்சம் ரூபாய் பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சுமார் ஆறுபேரடங்கிய கும்பல் ஒன்றே இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. முகத்தை கறுப்புத் துணிகளால் கட்டிய வாறு கூரிய ஆயுதங்களையும் கொள்ளையர்கள் வைத்திருந்ததாக கூறப்பட்டது.

கொக்குவில் நாமகள் வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள வங்கி ஊழியர் ஒருவரின் வீட்டில் இருந்து ஓர் இலட்சம் ரூபாய் பணமும் 6 பவுண் நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

அவ்வீட்டில் இருந்த வயோதிப மாது ஒருவரும் கொள்ளையர்களால் தாக்கப்பட்டுள்ளார். இதே வேளை பொற்பதி வீதியிலுள்ள, மருந்தகம் ஒன்றின் உரிமையாளரின் வீட்டிலிருந்து 20 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

சம்பவங்கள் இடம்பெற்றவேளை அயலிலுள்ள வீடுகள் சிலவும் கொள்ளையர்களால் தாக்கப்பட்டுள்ளன. சம்பவம் குறித்து இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் உடனடியாக அங்கு வந்தபோதும் கொள்ளையர்களைப் பிடிக்க முடியாமல் போனதாகக் கூறப்பட்டது. (ம)

## எரியுண்ட...

வவுனியாப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

அடையாளம் காணப்படாத வகையில் எரியூட்டப்பட்டுள்ள இச் சடலம் சுமார் 27 வயதுடைய இளைஞனுடையதாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா வைத்தியசாலையில் இச் சடலம் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை வவுனியா மாவட்ட நீதிபதி இசைஞன் மேற்கொண்டார். (ச-5)

## சிங்கள...

நாமல் (வயது-22)ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

கல்முனை உடையார் வீதியில் நேற்றுக் காலை 9.25 மணியளவில் இவர்கள் மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களின் சடலங்கள் கல்முனை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. சம்பவம் குறித்த விசாரணைகளை கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## வன்னிக்...

நெருக்குப் பலத்த இழப்புக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. கூராய்க்குளக் கட்டுப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் காலை 8.45 மணியளவில் சிறாட்டிகுளத்தை நோக்கிப் பெருமெடுப்பில் முன் நகர்ந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தீவிர எதிர்த்தாக்குதலை நடத்தினர்.

சுமார் 5 மணி நேரம் வரை நீடித்த விடுதலைப்புலிகளின் தீவிர எதிர்த் தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 15 க்கும் அதிகமான படையினர் படுகாயமடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வவுனியா பாலமோட்டையில் படையினரின் முன் நகர்வு முறியடிக்கப் பட்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர். இதில் 5 படையினர் கொல்லப்பட்டுள்ளதோடு 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியாவிலுள்ள பாலமோட்டையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 12.40 மணியளவில் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் படையினர் முன் நகர்வுத் தாக்குதலை நடத்தினர்.

இம் முன் நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர். இதில் 5 படையினர் கொல்லப்பட்டனர். 7 பேர் படுகாயமடைந்தனர் என புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஆசிரியர்...

கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொள்கின்ற னர்.

இதில் வடக்கு மாகாணத்தில் நிலவும் அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கல் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது.

அத்துடன் பாடசாலைகளின் அபிவிருத்தி, பாடப் புத்தக விநியோகத்தில் உள்ள தாமதம், மாணவர்களின் பல்துறைசார் நடவடிக்கையிலுள்ள தடைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது. (ச-5)

## யாழ்ப்பாண...

இறைச்சி-700 ரூபாய், மாட்டிறைச்சி-500 ரூபாய்,முட்டை-18 ரூபாய், பெற்றோல்-167 ரூபாய் போன்ற விலை களைக் கொடுத்து வாங்குகிறார்கள்.

கொழும்பில் 650 ரூபாய்க்கு வாங்கும் சீமெந்து யாழ்ப்பாணத்தில் 2 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. கொழும்பில் 200 ரூபாய்க்கு கொள்வனவு செய்யக் கூடியதாகவுள்ள மீனை அங்குள்ள மக்கள் ஆயிரம் ரூபாய் வரை கொடுத்து வாங்குகின்றனர்.

ஏன் இவ்வாறானதொரு நிலையை அம் மக்கள் எதிர்கொள்கின்றனர். வன்னி,முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு உணவை ஓர் ஆயுதமாக அரசு பயன்படுத்துகின்றது. இவற்றின் அடிப்படையில் நாங்கள் ஓர் தேசமாக மாறித் தொழிலாளர் ஆட்சியை நிறுவுவோம்.

அதனை நீங்கள் குறிப்பாக ஜே.வி.பியினர் தெற்கிலும் ஓர் தொழிலாளர் ஆட்சியை நிறுவி இரண்டு தேசமாகப் பிரிவோம். பின்னர் வேண்டுமானால் இரண்டு தேசமும் இணைந்து ஓர் ஒன்றியமாகச் செயற்பட நாங்கள் தயாராகவுள்ளோம்.

அனைவரையும் புலி என்று அழைக்கும் அரசாங்கம் தற்போது ஜே.வி.பியினரையும் புலி என்று அழைக்கின்றது. எனவே ஜே.வி.பியின் ஆதரவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததால் அவரும் புலியின் ஆதரவாளர் என்ற கருத்துக்கு அரசாங்கம் வருமா? என கேள்வி எழுப்பினார். (ச-5)

## மு.கா.தலைவர்...

சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ரவூவ் ஹக்கீம் எம்.பியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து சபையின் எதிர்க்கட்சித் தரப்பு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். அவருக்கு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.ஐ.தே.கவின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வெற்றிடத்துக்கே ரவூவ் ஹக்கீம் எம்.பியாக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-5)

## ஜனாதிபதி...

ஏற்பாடுகள் குறித்து பேச்சு நடத்துவதற்காகவே ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இந்தப் பேச்சுக் குறித்த விபரங்கள் வெளியிடப் படவில்லை.

ஜனாதிபதியுடன் சென்றவர்களின் விபரங்களும் வெளியிடப்படவில்லை. இந்தியப் பிரதமருடனான சந்திப்பை முடித்துக் கொண்டு இன்று இரவே ஜனாதிபதி மீண்டும் கொழும்பு திரும்பவுள்ளார்.

அண்மையில் இந்திய உயர் மட்டக் குழுவினர் கொழும்புக்கு முன் அறிவிக்கப்படாத பயணத்தினை மேற்கொண்டு இரகசியப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர். அதன் ஒரு கட்டமாகவே மகிந்தவும் இந்தியாவுக்கு அவசர பயணத்தினை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## வேலை நிறுத்தம் வெற்றி...

ஜே.வி.பியின் இந்த பொது வேலை நிறுத்த அழைப்பிற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்ற கட்சிகளும் ஆதரவு தெரிவித்திருந்த போதிலும் ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கம் இதனை முறியடிக்கும்படி தனது உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் பல இடம்பெற்றிருக்கின்ற போதிலும் குறிப்பிடத்தக்க அளவில் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இடம்பெற்றதாகத் தகவல்கள் வெளியாகவில்லை.

எனினும் கடமைக்குச் சமுகமளித்த சுகாதார ஊழியர்கள் தாக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார். இதை விடக் கண்டியில் ரயில் மீது கழிவு எண்ணெய் வீசப்பட்டது. கொழும்பில் அநேகமாகப் போக்குவரத்து, பாடசாலை , வைத்தியசாலை, நீர் வழங்கல், மின்சாரம் மற்றும் சுகாதாரம் போன்ற அனைத்து அத்தியாவசிய சேவைகளும் எவ்வித தடங்கலுமின்றி இடம்பெற்றிருந்தன.

கொழும்பு வீதிகளில் வழமைக்கும் அதிகமான அளவில் இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். ரயில் சேவைகளும் பெரும்பாலும் வழமை போல் இடம்பெற்றன.

பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்களின் வருகையில் எவ்வித வீழ்ச்சியும் ஏற்படவில்லை என்றும் மாணவர்களின் வருகையில் ஓரளவு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதாகவும் கல்வித்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மூத்த பணியாளர்கள், அதிகாரிகள் மட்டுமே பெருமளவில் வேலைக்குச் சமுகமளிக்கவில்லை என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்திருக்கின்றார்.

வெளிமாவட்டங்களைப் பொறுத்தவரை சில இடங்களில் இந்தப் போராட்டம் ஓரளவிற்கு வெற்றியடைந்திருப்பதாகவும் சில இடங்களில் தோல்வியில் முடிந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் தொழிற்சங்கப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் நோக்கில் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அநேக அரச நிறுவனங்களில் பலர் பலவந்தமாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தபால் திணைக்களத் தலைமையகம் மற்றும் ஏனைய தபால் நிலையங்களின் பணிகளும் ஸ்தம்பிதம் அடைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சங்கப் போராட்டம் காரணமாகக் கொழும்புக் கோட்டை ரயில் நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அநுர பிரியதர்ஷன யாப்பா இந்தப் போராட்டம் தோல்வியடைந்ததாகத் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் அனைத்துச் செயற்பாடுகளும் வழமை போன்று இடம்பெற்றன. பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை குறைவாகக் காணப்பட்டது.(ச-5)


யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
பரிசளிப்பு நாள் - 2008

இடம் : பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
கொக்குவில் இந்துக் கல்லூரி

காலம் : 12.07.2008 (சனிக்கிழமை)
காலை 9.00 மணி

தலைவர் : திரு. அ. அகிலதாஸ்
(அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

பிரதம விருந்தினர் : திருமதி. அ. வேதநாயகம்
(பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்)

சிறப்பு விருந்தினர்: செல்வி. ஞானலோஜினி சிவஞானம்
(சட்டத்தரணி)

குறிப்பு : 2006/2007 இல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற எமது கல்லூரி மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
பழைய மாணவர்சங்கம

விளம்பர அனுசரணை
MARSHA SYSTEMS ( PVT ) LTD.
# 74 Kannathiddy Road, Jaffna. T.P 021-2229418
(c-1301)



MEGA OFFER
Pentium IV கணணிகள் மலிவு விலையில்
Intel Processor 1.6, Intel Mother Board, Ram 256, Samsung CD Rom, VGA 64MB, Network Card, 40 GB Hard disk, Sound Card, 17" Samsung Moniter, Logitech, Key Board, Mouse & Speaker.
17" Samsung Moniter 8500 /=
(One Year Warranty) 35,750

STR Computer System
No.384, Navalar Road,
Nallur, Jaffna.
(Near to Kailasapillayar Kovil)
T.P. 021 4590775
Mobile:- 077 4192275
(1450)



தலைமைத்துவப் பயிற்சி

இடம் :- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
காலம் :- 11.07.2008.வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு
தலைமை :- கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம்
கருத்துரை :- பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா
கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் க.பொ.த. உயர் தர மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்வர்.

செயலாளர்
பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமம்
(C-1300)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.